Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 10.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

யாழ்.நகரில் தனித்துவமான
கலைநயம் மிக்க துல்லியமான
அச்சுவேலைகளுக்கு
SR சிறந்த இடம்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 சித்திரை 04 ஹிஜ்ரி 1427 ற.அவ்வல் 19 (17.04.2006) திங்கட்கிழமை இதழ் 199

# சுமுக சூழலை ஏற்படுத்தும் வரை

# பேச்சில் பங்கேற்க முடியாது!

## நோர்வே அரசாங்கத்துக்கு புலிகள் கடிதம்

கிளிநொச்சி —

பேச்சுக்களுக்கான அரசின் தடைகளை அகற்றி சுமுகமான நிலைமை ஏற்படுத்தப் படும் வரை ஜெனிவா பேச்சுக்களில் பங் கேற்க முடியாதென விடுதலைப் புலிகள் நோர்வே அரசுக்கு நேற்று உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்று மாலை நோர்வே தூதுவர் ஹான்ஸ்பிரட்ஸ் கருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இந்த முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தின் முழு விவரமும் வரு மாறு -

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கடற்பயணம் குறித்த

## கொகன்ன-ஹென்றிக்சன் பேச்சுக்கள் தோல்வியில்!

கொழும்பு —

விடுதலைப் புலிகளின் கிழக்குப் பிராந்தியத் தளபதிகளின் வன்னிக்கான பயண ஒழுங்கு களில் ஏற்பட்ட பிணக்குத் தொடர்பாக அரசாங்க சமாதான செயலகத்துக்கும், போர்நிறுத்தக் கண் காணிப்புக் குழுவுக்கும் இடையில் நேற்று இடம் பெற்ற சந்திப்பு தோல்வியில் முடிவடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பில் பிரச்சினைகளில் சிலவற் றுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளதாக அரசாங்க சமா தான செயலகப் பணிப்பாளர் பாலித கொகன்ன தெரிவித்தார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்ப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சு முயற்சி தோல்வி கண்டால் நான்காம் கட்ட போர் வெடிக்கும்!

## எச்சரிக்கிறது கொழும்பு பத்திரிகை

கொழும்பு —

ஜெனிவா இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தை முயற்சிகள் தோல்வியடைந்தால் நான்காம் கட்ட ஈழப்போர் தொடங்கும் என்று கொழும்புப் பத்தி ரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும்-

விடுதலைப் புலிகள் யுத்தத்துக்குச் சென்றால் அத்தகைய நிலைக்கு முகம் கொடுப்பதற்கு படை யினரை தயார் நிலையில் வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் மீண் டும் யுத்தத்தை தொடங்கினால் அது நான்காவது கட்ட ஈழப்போரின் தொடக்கமாக கருதப்படும். இரண்டாம் சுற்றுப் பேச்சுக்களில் விடுதலைப் புலி கள் கலந்து கொண்டாலும், அதன் இறுதிவரை அவர்கள் இருப்பார்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டுவிலில் கிளைமோர்;

## மட்டுவில் கிளைமோர்;

## மட்டுவிலில் கிளைமோர்; இராணுவச் சிப்பாய் பலி!

தென்மராட்சி —

தென்மராட்சி - மட்டுவில் பகுதியில் நேற்றுக் காலை நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொருவர் படுகாயமடைந்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது - நேற்றுக்காலை 7.40 மணியளவில் கனகம்புளியடிச் சந்திக்கு மேற்கே பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்துக்கு அருகில் வீதி ரோந்தில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரை இலக்குவைத்தே கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் திடீரென ஊரடங்கு அமுல்!

மன்னார் —

மன்னாரில் நேற்று மாலை அமுல்படுத்தப்பட்ட பொலிஸ் ஊரடங்குச் சட்டம் திடீரென இரவு எட்டு மணியுடன் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் 5 மணியளவில் ஒலிபெருக்கிமூலம் இன்று காலைவரை உரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படுவதாக அறிவித்திருந்த போதிலும் - திடீரென இரவு எட்டுமணியுடன் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - மன்னார் நகரை நேற்று காலை சுற்றிவளைத்த பொலிஸார் தேடுதல் நடத்தினர்.

நேற்றுக் காலை 10 மணியளவில் மன்னார் நகர்பகுதியில் பொலிஸார் பொதுமக்களை சோதனைக்குட்படுத்தினர். (12 ஆம் பக்கம் பார்க்க)

# தாக்குதல்கள் தொடரும்

## வவுனியா மக்கள்படை எச்சரிக்கை

வவுனியா —

முப்படையினர், ஒட்டுக் குழுவினர் வெளியேறும்வரை அவர்கள் மீதான தாக்குதல்கள் தொடரும் என வவுனியா பொங்கியெழும் மக்கள் படை எச்சரிக்கை விடுத்துள்ளது.

வவுனியா - ஜோசப் முகாம் முன்பாக நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலுக்கு உரிமை கோரி வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

வவுனியா மாவட்டத்தில் அண்மைக்காலமாக மக்கள் பலர் படுகொலை செய்யப்பட்டு வந்துள்ளனர். இதில் ஒட்டுப்படைகளும், இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் இணைந்து இந்தக் கோழைத்தனமான தாக்குதல்களைச் செய்தது வெளிப்படையான உண்மையாகும். அத்துடன் திருமலை, யாழ்.குடாநாடு பகுதிகளில் தமிழ் உறவுகள் பலர் இனவாதக் காடையர்களாலும் இராணுவத்தினராலும் (12 ஆம் பக்கம் பார்க்க)

### விடுதலைப் புலிகளுக்கு எதிராக

# சர்வதேசம் தடைகளை விதிக்க அரசாங்கம் தொடர் கோரிக்கை

கொழும்பு —

விடுதலைப் புலிகளுடனான சமாதான நடவடிக்கைகளுக்கு தொடர்ந்து குறுக்கீடுகளை ஏற்படுத்தி வரும் அரசு - இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி புலிகள் மீது சர்வதேச அளவில் தடைகளை ஏற்படுத்த முனைவதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகள் அமைப்பை ஐரோப்பிய ஒன்றியமும் தடைசெய்ய வேண்டுமென இலங்கை அரசாங்கம் கோரிவருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் படையினருக்கு எதிராக விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் தாக்குதல்கள் உடனடியாக நிறுத்தப்படாவிட்டால் - ஐரோப்பிய ஒன்றியமும் விடுதலைப் புலிகள் அமைப்பை தடைசெய்யுமென நம்புவதாக அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் கூறினார்.

அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா மற்றும் கனடா போன்ற நாடுகள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டுவில் கிளைமோர; மக்கள் படை உரிமை!

யாழ்ப்பாணம் —

சமாதான காலத்தில் அப்பாவித் தமிழ்மக்கள் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்படும்போது பொறுமைகாக்க முடியாத நிலையில் படையினர் மீதான தாக்குதல்களை ஆரம்பித்துள்ளதாக யாழ்.மாவட்ட பொங்கியெழும் மக்கள் படை தெரிவித்துள்ளது.

சரசாலையில் நேற்று படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலுக்கு உரிமைகோரி வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

சமாதானம் என்ற மாயையை இனியும் நாம் நம்பத் தயாரில்லை. சமாதான காலத்தில் நாம் வஞ்சகத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## படை அதிகாரி கைதடியில் காயம்

யாழ்ப்பாணம் —

கைதடியில் இராணுவ அதிகாரி ஒருவர் இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் காலை 10.10 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் லான்ஸ் கோப்ரல் பெரேரா என்பவரே கழுத்தில் படுகாயமடைந்த நிலையில் பலாலி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் இவர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு மாற்றப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# காடையர்களின் கொலை வெறிக்கு இரையாகாது பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுங்கள்!

## தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம் —

தமிழின அழிப்புக்காக சிங்களக் காடையர்களும், குண்டர்களும் வரவழைக்கப்பட்டுள்ள நிலையில் - அவர்களின் கொலை வெறிக்கு இரையாகாது மக்களை பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு யாழ். மாவட்ட தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது -

யாழ். குடாநாட்டில் மிகப்பெரிய தமிழின அழிப்புக்காக படையினருடன் இனவெறி பிடித்த சிங்களக் காடையர்களும், குண்டர்களும் கொண்டு வந்து குவிக்கப்பட்டிருப்பதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

யாழ். குடாநாட்டில் மூலை முடுக்கெல்லாம் படையினர் நிறுத்தப்பட்டுள்ளதுடன் - கொலைகளும் நடந்தேறி வருகின்றமை அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது.

அத்துடன், சர்வதேச தொண்டு நிறுவனங்களும், பணியாளர்களும் அபாயமான இந்த நிழல் யுத்தச்சூழல் காரண்மாக வெளியேறத் தொடங்கியுள்ளனர். சர்வதேச கண்காணிப்பாளர்கள் இருக்கையில் தமிழ்த்தேசப் பற்றாளர்களைப் படையினர் படுகொலை செய்து வருகின்றனர். இந்த நிலையில், கண்காணிப்புக் குழுவினரும் வெளியேறினால் நிலைமை மேலும் மோசமடையும். இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழின அழிப்புக்காகவே காடையர்களும், குண்டர்களும் குவிக்கப்பட் டுள்ளனர்.

அன்பான எம் உறவுகளே! நீங்கள் பாதுகாப்பான இடத்தை நோக்கி நகருங்கள். வழமைபோல் என்று இருந்துவிடாதீர்கள். எதிரியின் பிடியிலிருந்து உங்களை விடுவித்து யாழ். குடாநாட்டிலிருந்து எதிரியை விரட்ட ஒத்துழையுங்கள். நம்பிக்கையோடு நகருங்கள் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போக்குவரத்துச்சபை ஊழியர்களின் பணிக்கொடையை உடன் வழங்கவும்!

## கஜேந்திரகுமார் எம்.பி கோரிக்கை

சுதுமலை —

வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் ஓய்வு பெற்றோர்களுக்கு பணிக்கொடை வழங்குவதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ரயில்வே மற்றும் போக்குவரத்து அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் கடமையாற்றிக் கடந்த 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தின் பின்னர் இளைப்பாறிச் சென்ற 50 க்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கான பணிக்கொடைக் கொடுப்பனவுகள் இன்று வரை வழங்கப்படவில்லை.

மேற்படி விடயம் சம்பந்தமாக பாதிக்கப்பட்டவர்களின் நலன்கருதி நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போக்குவரத்து அமைச்சிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயம் குறித்து போக்குவரத்துச் சபையின் தலைவருக்கு, வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் கடமையாற்றி இதுவரை பணிக்கொடை வழங்கப்படாதவர்களுக்கு விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு போக்குவரத்து அமைச்சினால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

எனவே, பாதிக்கப்பட்ட இளைப்பாறிய சாரதிகள், காப்பாளர்கள், பொறியியல் ஊழியர்கள், சாலை முகாமையாளர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் ஆகியோரின் நலன்களைக் கவனத்தில் கொண்டு விரைவில் பணிக்கொடையை வழங்குமாறு நடவடிககை எடுக்கும்படி சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (44)

# பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டியை விரைவில் நடத்துமாறு கோரிக்கை!

நெடுந்தீவு —

நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவுக்கான வருடாந்த விளையாட்டு நிகழ்வுகள் இதுவரை இடம்பெறாமையால், கழக அங்கத்தவர்கள் மத்தியில் பெரும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

ஏனைய பிரதேச செயலகப் பிரிவுகளில் பிரதேச மட்டப்போட்டிகள் இடம்பெற்று மாவட்ட மட்டப்போட்டிகளுக்கான தயார்ப்படுத்தல்கள் இடம்பெற்று வருகின்றபோதும், நெடுந்தீவிலுள்ள பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான போட்டிகள் இடம்பெறவில்லை.

இதனால், திறமைவாய்ந்த வீர, வீராங்கனைகள் மாவட்ட மட்டத் தெரிவுப் போட்டிகளில் இடம்பெறமுடியாத நிலை ஏற்படுமென விளையாட்டுத்துறை சார்ந்தவர்கள் கவலை தெரிவித்தனர்.

இதேவேளை - நெடுந்தீவுப் பிரதேசத்துக்கென விளையாட்டு உத்தியோகத்தர் ஒருவரை நிரந்தரமாக நியமிக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (113)

# ஆழியவளை கடற்பரிசோதகர் அலுவலகத்தை மீண்டும் திறக்குமாறு மீனவர்கள் கோரிக்கை!

வடமராட்சி கிழக்கு —

போர் நடவடிக்கைகளின் போது மூடப்பட்ட ஆழியவளை கடற்பரிசோதகர்அலுவலகத்தை மீளத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மாமுனை தொடக்கம் நல்லதண்ணீர்த்தொடுவாய் வரையிலான கடற்தொழிலாளர்களின் நலன்கருதி கடந்த காலத்தில் இரண்டு கடற்தொழில் பரிசோதகர் பிரிவுகள் தாளையடி, ஆழியவளையில் இயங்கி வந்தன.

போர்க்கால நடவடிக்கைகள் காரணமாக - மக்கள் இடம்பெயர்வு, ஊழியர் பற்றாக்குறை ஆகிய காரணங்களால் கடற்தொழில் பரிசோதகர் ஒருவர் மட்டுமே நியமிக்கப்பட்டுக் மிகுந்த சிரமத்தின் மத்தியில் கடமையாற்றி வருகிறார்.

இந்தப் பிரதேசத்திலுள்ள 3 ஆயிரத்து 500 வரையிலான நிரந்தர கடற்தொழிலாளர்கள், பருவ காலங்களில் இந்தப்பிரதேசத்தில் வாடிகள் அமைத்து கரைவலைத் தொழிலில் ஈடுபடும் 2 ஆயிரத்து 500 பேர் வரையிலான கடற்தொழிலாளர்கள் ஆக மொத்தம் 6 ஆயிரம் வரையான கடற்தொழிலாளர்களின் நலன்களை தனியொருவரால் கண்காணிக்க முடியாத நிலையுள்ளது.

சுனாமி அனர்த்தத்தினால் இந்தப் பிரதேசம் மோசமாகப் பாதிக்கப்பட்டதுடன், கடற்தொழில் உபகரணங்களும் முற்றுமுழுதாக அழிந்துபோயுள்ளன.

இந்தநிலையில் - இழந்த உபகரணங்களின் பதிவுகள், தேவையான உபகரணங்களின் பதிவுகள், பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரச, அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொடுத்த படகுத்தொகுதிகள், கட்டுமரத்தொகுதிகளின் பதிவுகள், கடற்தொழில் குடும்பங்களின் பதிவுகள், மீன்பிடித்துறை சம்பந்தமான புள்ளிவிபரத்தரவுகள் கடற்தொழிலாளர்களுக்கான அடையாள அட்டை மற்றும் அவர்களுக்கான காப்புறுதி போன்ற வேலைகளை தனித்து ஒருவரால் பூரணமாகச் செய்துகொள்ள முடியாத நிலை உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆகவே, தற்காலிகமாக மூடப்பட்டிருக்கும் ஆழியவளை கடற்தொழில் பரிசோதகர் அலுவலகத்தை மீளத் திறப்பதுடன், அந்த அலுவலகத்துக்கு மேலும் ஒரு கடற்தொழில் பரிசோதகரை நியமித்து உதவுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (21)

## சனசமூக நிலைய 43 ஆவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம் —

கொண்டலடி ஞானவைரவர் சனசமூக நிலையத்தின் 43 ஆவது நிறைவு விழா இன்று பிற்பகல் 5.30 மணிக்கு சனசமூக நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது. சனசமூக நிலையத் தலைவர் மு. உதயசிறி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ். மாநகரசபை ஆணையாளர் சி.வி.கே. சிவஞானம் பிரதம விருந்தினராகவும், ஆறு. திருமுருகன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்.

நல்லூர் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் கே. விஜிதரன், சனசமூக நிலைய உத்தியோகத்தர் சு. சோமலிங்கம் கிராம அலுவலகர் எஸ். சந்திரகுமார் ஆகியோர் கௌரவவிருந்தினராகலந்து கொள் வார்கள்.




# தி.மு.க. தலைவர் கருணாநிதி முதல்வராக பதவி ஏற்பார்!

## என்கிறார் தயாநிதிமாறன்

கும்பகோணம் —

தி.மு.க தலைவர் மு.கருணாநிதி தமிழக முதல்வராகப் பதவி ஏற்பார் என மத்திய அமைச்சர் தயாநிதிமாறன் தெரிவித்தார்.

கும்பகோணத்தில் அவர் பேசியதாவது -

தமிழக மக்கள் 2004 ஆம் ஆண்டு மக்க ளவைத் தேர்தலில் 40 இற்கு 40 என நல்ல தீர்ப்பு வழங்கினர். இதன் அடிப்படையில் தமிழகத்தைச் சேர்ந்த 13 பேர் மத்திய அமைச்சர்கள் ஆனார்கள்.

13 அமைச்சர்களும் தாங்கள் சார்ந்துள்ள துறைகள் மூலம் தமிழகத்துக்கு மட்டுமன்றி பிற மாநிலங்களுக்கும் நல்ல பல திட்டங்களை நிறைவேற்றி வருகின்றனர்.

சன். டிவியில் தனக்கு முக்கியத்துவம் கொடுத்துக் காட்டவில்லை எனக் கூறுகிறார் வைகோ. அதுவும் ஜெயலலிதா பதவி விலக வேண்டும் என அவர் பாதயாத்திரை சென்றதைக் காட்டவில்லையாம்.

அவரின் ஆதரவால்தான் வெற்றி பெற்றதாக சவால் விடுகிறார். அந்தளவுக்கு தி.மு.க இல்லை. சோனியா காந்தியிடம் வைகோவை அறிமுகப் படுத்தியதே கருணாநிதிதான்.

2004 இல் யாரை முன்னிறுத்தி அவர்களுக்கு எம்.பி பதவி கிடைத்தது என்று நினைத்துப் பார்க்க வேண்டும். அவர்களது பதவியை ராஜினாமா செய்துவிட்டு வந்து பேசட்டும்.

மத்திய அரசின் திட்டங்கள் பலவற்றைத் தமிழகத்தில் செயல்படுத்த தடங்கல்களை எற்படுத்துகிறது தமிழக அரசு.

கருணாநிதி முதல்வரானால் தொலைபேசி அழைப்பு மூலம் அனைத்து மத்திய திட்டங்களும் உடனுக்குடன் வரும். கருணாநிதியை நள்ளிரவில் தரதரவென இழுத்துச் சென்றதை யாரும் மறக்கக் கூடாது. நல்ல தீர்ப்பை மக்கள் வழங்க வேண்டும் என்றார் மாறன்.

# தமிழக தேர்தலில் அ.தி.மு.க கூட்டணி அதிகமான இடங்களைப் பிடிக்கும்!

## சி.என்.என், இந்து கருத்துக்கணிப்பில் தகவல்

புதுடெல்கி —

தமிழக தேர்தலில், அதிமுக கூட்டணி அதிக இடங்களில் வெற்றி பெறும் என்று சி.என்.என், இந்து பத்திரிகையின் கருத்துக்கணிப்பில் தெரிய வந்துள்ளது.

சி.என்.என் - ஐ.பி.என் டெலிவிஷன் மற்றும் இந்து பத்திரிகை இணைந்து, தமிழக சட்டசபை தேர்தல் குறித்து கருத்துக் கணிப்பு நடத்தியது. இதில் அ.தி.முக கூட்டணி அதிக இடங்களில் வெற்றி பெறும் என்று தெரியவந்துள்ளது.

அ.தி.மு.க கூட்டணிக்கு 46சதவீத வாக்குகள் கிடைக்கும் என்று இந்த ஆய்வில் கணக் கிடப்பட்டுள்ளது. விஜயகாந்தின் தேசிய முற்போக்கு திராவிட கழகத்துக்கு 5 சதவீதமும் ஏனைய கட்சிகளுக்கு 5 சதவீதமும் கிடைக்கும்.

கருத்துக் கேட்கப்பட்ட வாக்காளர்களில் 42 சதவீதம் பேர் மீண்டும் முதலமைச்சராக ஜெயலலிதா வருவதற்கு ஆதரவு தெரிவித்தனர். தி. மு.க தலைவர் கருணாநிதி முதலமைச்சர் ஆக வேண்டும் என்று 39 சதவீதம் பேர் கருத்து தெரிவித்து உள்ளனர்.

நடிகரும், தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் தலைவருமான விஜயகாந் முதலமைச்சர் ஆவதற்கு 5 சதவீதம் பேர் ஆதரவாக கருத்து தெரிவித்தனர்.

இந்த பிரிவில் பா.ம.க தலைவர் டாக்டர் ராமதாஸ், தி.மு.க துணை பொதுச் செயலர் மு.க ஸ்டாலின் இருவருக்கும் தலா ஒரு சதவீத ஆதரவு மட்டுமே உள்ளது.

இந்தக் கருத்துக்கணிப்பின் மற்றொரு முக்கிய அம்சம் என்னவென்றால், ஜெயலலிதா தலைமையிலான தற்போதைய அதிமுக அரசின் செயற்பாட்டில் 67சதவீதம் பேர் திருப்தி தெரிவித்துள்ளனர்.

இந்தக் கருத்துக் கணிப்பில் மொத்தத்தில் 2 சதவீத வாக்குகள் அ.தி.மு.க கூட்டணிக்கு அதிகம் கிடைக்கும் என்று தெரியவந்திருப்பதால் அ.தி.மு.க கூடுதல் இடங்களில் வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியை பிடிக்கும் வாய்ப்புள்ளது.

விஜயகாந்தின் தேசிய முற் போக்கு திராவிட கழகம் 5 சதவீத வாக்குகளைப் பெறும் என்று எதிர்பார்க்கப்ப டுகிறது.

அவருடைய ஆதரவாளர்களில் தி.மு.க வி லிருந்து வந்தவர்கள் 49 சதவீதமும், அ. தி. மு.கவில் இருந்து 25 சதவீதமும் ஏனைய கட் சி கள் மற்றும் புதிய வாக்காளர்களில் இருந்து 26 சத வீதம் பேரும் இடம் பெற்றுள்ளனர். என்று கருத்துக்கணிப்பில் கூறப்பட்டுள்ளது.


நாதன்ஸ் யாழ்ப்பாணம்

எஸ்.ஜே.சூர்யா, நயன்தாரா, விவேக் நடித்த



கள்வனின் காதலி

கா.நே : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை

விஜய், அசின், பிரகாஸ்ராஜ் மற்றும் பலர் நடித்த

சிவகாசி

கா.நே : (பு.நே) 10.30, 2.15, 5.30

ராஜா யாழ்ப்பாணம்

புதுவருட வெளியீடு

பரத், மல்லிகா கபூர் மற்றும் பலர் நடித்த



அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

ப.நேரம் : 10.30,2.30,6.30,9.30

மனோகரா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின அதிரடி வெளியீடு

அஜித்குமார், சதா மற்றும் பலர் நடித்த

ரிக்கெற் முற்பதிவு செய்து கொள்ளலாம்

காட்சி நேரம் 10.30,2.30,6.30,9.30



# திருமலை வன்முறைகளுக்கு படையினரே முழுக்காரணம்!

## வர்த்தக சம்மேளனம் குற்றச்சாட்டு

திருகோணமலை—

திருமலை வன்முறைகளுக்கு படையினரே காரணமென திருகோணமலை மாவட்ட தொழில் மற்றும் வர்த்தக சம்மேளனம் குற்றம் சாட்டியுள்ளது.

திருமலையில் வர்த்தக சங்கத்தினருக்கும் அமைச்சர் ரோகித போகெல்லாகம, வடக்கு - கிழக்கு ஆளுநர் மொகான் விஜேவிக்கிரம, இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா மற்றும் படைத் தரப்பினருக்குமிடையேயான மாநாடு நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

இந்த மாநாட்டில் திருமலை வர்த்தக சம்மேளனம் தரப்பில் கூறப்பட்டதாவது -

திருகோணமலையில் எமது வர்த்தக நடவடிக்கைகளைப் பாதுகாக்க அரசாங்கம் உறுதியான, அவசரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

எப்போது சந்தைகளில் குண்டு வெடித்தாலும் காடையர்கள் எமது வர்த்தக நிறுவனங்களையே தாக்குகின்றனர். படையினரும், பொலிஸாரும் அந்தக் காடையர்களுக்கு எதிராக ஒரு சில நடவடிக்கைகளையே மேற்கொள்கின்றனர். இது 1977 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

எமது பல வர்த்தக நிறுவனங்கள் இராணுவம் மற்றும் பொலிஸார் முன்னிலையிலேயே நிர்மூலமாக்கப்பட்டது எனக் குற்றம் சாட்டினர்.

மேலும் திருகோணமலை வன்முறைகளில் நிர்மூலமாக்கப்பட்ட 31 வர்த்தக நிறுவனங்களினது விபரங்களையும் திருமலை வர்த்தக சம்மேளனம் அரசாங்கக் குழுவிடம் கையளித்தது.

வன்முறைகளில் வர்த்தக நிறுவனங்களை இழந்திருப்போர் மீண்டும் வியாபாரத்தைத் தொடங்க ஏதுவாக உரிய நட்ட ஈட்டுத் தொகையை அரசாங்கம் வழங்க வேண்டுமென்றும் வர்த்தக சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதேபோல் - இத்தகைய முன் கூட்டிய திட்டமிட்ட தாக்குதல் நடவடிக்கைகள் எதுவும் இனிவரும் காலத்தில் நடை பெறாது என்ற உறுதிமொழியை அரசகுழு தங்களுக்கு வழங்க வேண்டும் என்றும் வர்த்தக சம்மேளனத்தினர் வலியுறுத்தினர்.

வடக்கு - கிழக்கு மாகாண தலைமைச் செயலாளர் செயலகத்தில் நேற்று முன்தினம் மாலை 3.30 மணிக்கு இந்தக் கூட்டம் தொடங்கி மாலை 5.30 வரை நடைபெற்றது.

## கிளைமோர்கள் மீட்பாம்!

மட்டக்களப்பு—

மட்டக்களப்பு - சத்துருக்கொண்டான் பிரதேசத்தில் நேற்று முன்தினம் காலை இரு கிளைமோர் குண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகப் படைத் தரப்பினர் தெரிவித்தனர்.

சத்துருக்கொண்டான் - 11 ஆவது மைல்கல் பகுதியில் நேற்று முன்தினம் காலை மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது 5கிலோ எடைகொண்ட இரண்டு கிளைமோர் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அதேவேளை, ஓமந்தை சோதனைச் சாவடிக்கருகில் கிளைமோர்குண்டுகள் இரண்டைப் பொருத்த வந்த ஒருவரை படையினர் கைது செய்திருப்பதாகவும் படைத்தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

## திருமலை வன்முறையில் இந்திய சோதிடரும் பலி!

திருகோண மலை—

திருகோணமலை நகரில் தமிழர்களுக்கு எதிராக கடந்த வெள்ளிக் கிழமை சிங்களக்காடையர்களால் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகளின் போது இந்திய சோதிடர் உட்பட மூவர் கொல்லப்பட்டனர்.


இந்தக் கலவரத்தில் கொல்லப்பட்ட இரண்டு தமிழர்கள் மற்றும் ஒரு இந்தியரது சடலங்கள் நேற்று முன்தினம் காலை திருகோணமலை பொதுவைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன.

கிண்ணியாவில் கடந்த வெள்ளிக் கிழமை சிங்களக்காடையர்கள் நடத்திய கொடூரத்தாக்குதலில் நடேசபுரத்தைச் சேர்ந்த சோமசுந்தரம் மகேஸ்வரி(வயது 60) என்பவர் கத்தியால் குத்தி படுகொலை செய்யப்பட்டார்.

தென்னிந்தியாவின் பெங்களூர் இராமமூர்த்தி நகரைச் சேர்ந்த சோதிடரான வெங்கடசாமி வெங்கட்ராமன் (வயது 30), திருகோணமலை அரச செயலக ஊழியரான தண்ணீமலை நமசிவாயலிங்கம் (வயது 28) ஆகியோரும் இந்த வன்முறையில் படுகொலை செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது

## தமிழ் மக்கள் மீதான படுகொலைகள் சமாதானத்துக்கு விடுக்கப்பட்ட சவால்!

### சந்திரசேகரன் எம்.பி. எச்சரிக்கை



கொழும்பு—

தமிழ் மக்கள் தொடர்ந்தும் படுகொலை செய்யப்பட்டு வருவதனது சமாதானப் பேச்சுவார்த்தைக்கு விடுக்கப்படும் பாரிய சவாலென மலையக மக்கள் முன்னணித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

போர் நிறுத்தமும், சமாதானப் பேச்சுவார்த்தையும், இழுபறி நிலையில் சென்று கொண்டிருக்கும் நிலையில், தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதனது சமாதானத்தை விரும்பும் அனைவருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தப் படுகொலைகளுக்கு அரசாங்கம் காரணமில்லையெனக் கூறி அமையியாக இருந்தால் ஜனநாயகமே கேலிக்கூத்தாகிவிடும்.

இந்தப் படுகொலைகள் திடீரென இடம்பெறுவதில்லை. புதிய ஜனாதிபதி பதவியேற்றதிலிருந்து தொடர்ச்சியாக இவ்வாறான படுகொலைகள் இடம்பெற்றுக்கொண்டே இருக்கின்றன.

போருக்கான காரணம் விடுதலைப் புலிகளே என்று இனவெறியர்களால் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு வரும் போது - இராணுவத்தினருடன் சேர்ந்தியங்கும் துணைப்படையே காரணமென்பது தற்போது நிரூபணமாகி வருகிறது.

எனவே இந்தப் படுகொலைகளை ஜனாதிபதியின் கௌரவத்துக்கும், அரசியல் வாழ்க்கைக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் போரின்றாக என்பதை கருத்தில் கொண்டு ஜனாதிபதி செயற்பட வேண்டுமென மலையக மக்கள் முன்னணி வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது எனவும் அவர் தெரிவித்தார்.

## வேட்டைக்குச் சென்ற மூவர் படையினரால் கைது?

வவுனியா—

வவுனியா பெரியமடுக்காட்டுப் பகுதிக்குள் கடந்த வியாழக்கிழமை வேட்டைக்குச் சென்ற மூன்று குடும்பத்தவர்களை படையினர் கைதுசெய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புளியங்குளம் - பனிக்கை நீராவி பெரிய மடுப்பகுதியிலிருந்து தியாகராசா குகனேஸ்வரன் (வயது 36), சிவசம்பு நகுலேந்திரராசா (வயது44), மற்றும் சேமமடுவைச் சேர்ந்த சிவகுரு திரவியன் (வயது 32) ஆகியோர் வேட்டைக்காக பெரியமடுக் காட்டுப் பகுதிக்குச் சென்றனர்.

ஆனால் இவர்கள் இதுவரை வீடு திரும்பவில்லை என்று உறவினர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளிடமும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமும் முறைப்பாடு செய்துள்ளனர்.

அந்த மூவரும் படையினரால் கைது செய்யப்பட்டிருக்கலாம் என்று உறவினர்கள் அச்சம் தெரிவித்தனர்.

## சிறு உதவித் திட்ட நிராகரிப்புக்கு அறிக்கை சமர்ப்பிக்காததே காரணம்

### உலக வங்கிப் பிரதிநிதி தெரிவிப்பு

கொழும்பு—

உலக வங்கியின் இந்த வருட சிறு உதவித் திட்டத்துக்கு வடக்கு - கிழக்கிலுள்ள அரசசார்பற்ற நிறுவனமோ அல்லது அமைப்போ தெரிவு செய்யப்படாமைக்கு இந்த அமைப்புக்களோ அல்லது நிறுவனங்களோ தமது திட்ட அறிக்கையை எழுத்து மூலம் சரியான வகையில் முன்வைக்காமையே காரணமென உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் பீற்றர் ஹரோல்ட் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

அடுத்த வருடம் இந்தத் திட்டத்தின் கீழ் வடக்கு - கிழக்கை இணைத்துக் கொள்ளும் முயற்சிகளில் உலக வங்கி ஈடுபடும் திட்ட அறிக்கையை எவ்வாறு தயாரிப்பது என்பது தொடர்பாக எதிர்வரும் ஆறு மாதங்களுக்கு வடக்கு - கிழக்கில் உலக வங்கி பயிற்சிப் பட்டறையை நடத்தத் தீர்மானித்துள்ளது.

உலக வங்கியின் செயற்பாடுகளில் இது வித்தியாசமானதொரு செயற்பாடாகும். பாரிய நிதியை நன்கொடையாகக் கொடுத்து வந்த நாம்- இளைஞர்களைக் கருத்திலெடுத்து அமைப்புக்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இந்தச் சிறிய நிதியுதவிகளைச் செய்து வருகின்றோம்.

சமூக மற்றும் இளைஞர்களுடன் தொடர்புடைய அமைப்புகளுக்கே நாம் முதலிடம் வழங்குகின்றோம். இவர்கள் எமது நிதியுதவியின் கீழ் செயற்படுத்திய திட்டங்களை எமக்கு அறிக்கையாகச் சமர்ப்பிக்க வேண்டும். அத்துடன் இந்த அமைப்புக்களின் செயற்திட்டம் உலக வங்கியால் கண்காணிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

## புலிகளின் வன்னிப் பயணத்துக்கு அரசு ஹெலி வழங்கியிருக்கலாம்!

### கண்காணிப்புக்குழு பேச்சாளர்



கொழும்பு—

புலிகளின் கிழக்குப் பிராந்தியத் தளபதிகளை கிளிநொச்சிக்கு அழைத்து வருவதற்காக இலங்கை அரசு ஹெலிகொப்டரை வழங்கியிருக்கலாமென போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹெலன் ஓலப்ஸ் டோட்டயர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது -

இரு சாராரும் ஒருவர்மீது ஒருவர் குற்றம் சுமத்திக் கொண்டிருக்கிறார்கள். இருசாராருக்குமே தற்போது சமாதானத்தில் ஆர்வம் இருப்பதாகத் தெரியவில்லை.

இருவரும் ஒருவரை ஒருவர் குற்றம் சுமத்திக்கொண்டிராமல் இருந்திருந்தால் திட்டமிட்டபடி ஜெனீவா பேச்சுவார்த்தைகள் நடந்திருக்கும்.

கிழக்கிலிருந்து தளபதிகளை அழைத்துவருவதற்கு விடுதலைப் புலிகள் ஹெலிகொப்டர் கேட்டிருந்தனர். அரசாங்கம் அதனை வழங்கியிருக்கலாம்.

ஆனால், அரசாங்கம் வீணான சாக்குப் போக்குகளைக்கூறி ஹெலிகளை வழங்கமறுத்துவிட்டது.

கிழக்குத் தளபதிகளை அழைத்து வருவதற்கு படகுவசதி செய்துகொடுக்கப்பட்டது. எனினும், விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் பயணத்தை ரத்துச் செய்துவிட்டனர்.

இருசாராருமே ஒருவரையொருவர் குற்றம் சுமத்திக்கொண்டிருக்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

## 3 இலட்சத்து 22 ஆயிரம் பேர் வரி செலுத்துகின்றனராம்

### திணைக்கள அதிகாரி தகவல்

கொழும்பு—

நாடளாவிய ரீதியில் 3 இலட்சத்து 22 ஆயிரம் பேர் தற்போது வரி செலுத்தி வருவதாக உள்நாட்டு வருமான வரித் திணைக்களத்தைச் சேர்ந்த உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

வரி செலுத்துபவர்களின் எண்ணிக்கை இந்த வருடம் 40 ஆயிரத்தால் அதிகரிக்கப்படுவதுடன் 2007 ஆம் ஆண்டு 50 ஆயிரமாக அதிகரிக்கப்படும்.

அரசாங்கத்துக்கு வரியை இது வரை செலுத்தாதவர்களிடமிருந்து வரியை அறவிடுவதற்கான பல்வேறு நடைமுறைகளை உள்நாட்டு வருமான வரித்திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

இதன் முதல் நடவடிக்கையாக, செலுத்தப்படாத வரிகளுக்கு தண்டப் பணமின்றி ஜூன் 30ஆம் திகதி வரை வரிசெலுத்த முடியும். மக்களுக்கான சமூக நலன் சேவைகளை முறையாக வழங்குவதால் வரி செலுத்துவோர் தமது பொறுப்பை உணர்ந்து முறையாக செலுத்த வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

## அரச பாடசாலைகளின் எண்ணிக்கை குறைவடைந்து செல்வதாக தகவல்

### கல்வியமைச்சின் புள்ளிவிபரக்கிளை தெரிவிப்பு

கொழும்பு—

அரசாங்க பாடசாலைகளின் எண்ணிக்கை நாடளாவிய ரீதியில் குறைவடைந்து செல்வதாக கல்வியமைச்சின் புள்ளி விபரக்கிளை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக புள்ளி விபரக் கிளை வெளியிட்டுள்ள தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -


1998 ஆம் ஆண்டில் நாட்டில் மொத்தமாக 10 ஆயிரத்து 88 அரசாங்க பாடசாலைகள் இயங்கி வந்தன. ஆனால் தற்பொழுது இந்த பாடசாலைகளின் எண்ணிக்கை 9 ஆயிரத்து 765 ஆகக் குறைவடைந்துள்ளது. மாகாண சபைகளால் நிர்வகிக்கப்படும், பாடசாலைகளின் எண்ணிக்கையே இவ்வாறு குறைவடைந்து காணப்படுகிறது.

இதேவேளை வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அரசாங்க பாடசாலைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதன்படி 1998 ஆம் ஆண்டில் வடபகுதியில் 855 அரசாங்க பாடசாலைகளும், கிழக்கில் 949 அரசாங்க பாடசாலைகளும் இயங்கிவந்தன.

ஆனால் 2005 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, வடக்கில் 837 அரச பாடசாலைகளும், கிழக்கில் 961 பாடசாலைகளும் இயங்கி வருகின்றன.

இதுதவிர வடக்கில் இரண்டு இலட்சத்து 66 ஆயிரத்து 146 மாணவர்கள் கல்வி கற்பதுடன், 10 ஆயிரத்து 746 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றனர். கிழக்கில் 3 இலட்சத்து 76 ஆயிரத்து 956 மாணவர்கள் கல்வி கற்பதுடன், 15 ஆயிரத்து 114 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றனர். வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சராசரியாக 25 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற வகையில் உள்ளதாகவும் புள்ளிவிபரக் கிளை தெரிவித்துள்ளது.


# 7ஆவது போட்டியில் இந்தியா வெற்றி



ஜம்ஷெட்பூர்

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையே நேற்றுமுன்தினம் ஜம்ஷெட்பூரில் நடைபெற்ற ஏழாவதும், இறுதியுமான ஒருநாள் போட்டியில் இந்திய அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. இதன் மூலம் 5:1 என்ற அடிப்படையில் தொடரைக் கைப்பற்றியும் அந்த அணி கைப் பற்றியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய



அணி, இங்கிலாந்து அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு கேட்டுக்கொண்டது.

இதன்படி ஸ்ராரஸும், பெல்லும் தொடக்க ஆட்டக்காரர்களாகக் களமிறங்கினர். ஸ்ரோர் 43ஐத் தொட்டபோது - 5 பவுண்டரிகள் அடங்கலாக 25 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஸ்ரஸ், ஸ்ரீசந்த் வீசிய பந்தை தினேஷ் கார்த்திக்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய பிரியர் 2 ஓட்டங்களைப் பெற்று யுவராஜ் சிங் வீசிய பந்தை பதானிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரையடுத்து பீற்றர்சன் களமிறங்கினார். அவர் தனது வழமையான அதிரடி ஆட்டத்தை ஆட, மறுமுனையில் நின்ற பெல், 4 பவுண்டரிகள் அடங்கலாக 32 ஓட்டங்களைப் பெற்று ரன் அவுட்டானார்.

தொடர்ந்து கொலிங்வூட், பீற்றர்சனுடன் இணைந்தார். இந்நிலையில் அதிரடியாக ஆடி 11 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 64 ஓட்டங்களைப் பெற்ற பீற்றர்சன், யுவராஜ் சிங் வீசிய பந்தை உதப்பாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து ஜோன்ஸ், கொலிங்வூட்டுடன் இணைந்தார். இந்த ஜோடி சிறப்பாக ஆடி அணியை ஸ்திரப்படுத்தியது. இதில் ஜோன்ஸ் 7 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 53 ஓட்டங்களைப் பெற்று ஸ்ரீசந்த் வீசிய பந்தை கார்த்திக்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் பிளக்வெல் களமிறங்க, 2



பவுண்டரிகள், 2 சிக்ஸர் அடங்கலாக 64 ஓட்டங்களைப் பெற்றிருந்த கொலிங்வூட், பதான் வீசிய பந்தை ஆர்.பி.சிங்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து பிளங்கெற் களமிறங்கினார். அந்தவேளை, 11 ஓட்டங்களைப் பெற்றிருந்த பிளக்வெல், ஸ்ரீசந்த் வீசிய பந்தை ரெய்னாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய அலி 1 ஓட்டத்துடன் பதானின் பந்தில் ஆட்டமிழந்தார். பின்னர் மஃமூத் களமிறங்க, 6 ஓட்டங்களைப் பெற்றிருந்த பிளங்கெற், ஸ்ரீசந்த் வீசிய பந்தை வி.ஆர்.வி. சிங்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இறுதியாக அன்டர்சன் களமிறங்க, 9 ஓட்டங்களைப் பெற்றிருந்த மஃமூத், ஸ்ரீசந்த் வீசிய பந்தை வி.ஆர்.வி. சிங்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதனால் இங்கிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 288 ஓட்டங்களைப் பெற்றது. அன்டர்சன் ஓட்டமெதையும் பெறாமல் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் ஸ்ரீசந்த் 6, பதான் 2, யுவராஜ் சிங் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.


தொடர்ந்து 289 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு இந்திய அணி களமிறங்கியது.

அந்த அணியின் உதப்பாவும், ராவிட்டும் தொடக்க ஆட்டக்காரர்களாகக் களமிறங்கினர்.

இந்த ஜோடி சிறப்பாக ஆடி அணிக்கு வலுவான அடித்தளத்தை இட்டுக்கொடுத்து. இந்த ஜோடியைப் பிரிப்பதற்கு இங்கிலாந்து பந்துவீச்சாளர்கள் பெரிதும் சிரமப்பட்டனர்.

இந்தநிலையில் 12 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 86 ஓட்டங்களைப் பெற்றிருந்த உதப்பா, எதிர்பாராத வகையில் ரன் அவுட்டானார்.

அடுத்து யுவராஜ் சிங் களமிறங்க, 9



பவுண்டரிகள் அடங்கலாக 69 ஓட்டங்களைப் பெற்றிருந்த ராவிட், மஃமூத் வீசிய பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அவ[illegible]த்துக்கு ரெய்னா களமிறக்கப்பட்டார். யுவராஜ் - ரெய்னா ஜோடியும் சிறப்பாக ஆடியது. வெற்றி நெருங்கும் நேரத்தில் இந்திய அணி மேலுமொரு விக்கெட்டை இழந்தது. ரெய்னா 53 ஓட்டங்களைப் பெற்று கபீர் அலியின் பந்தில் போல்டானார்.

அவரையடுத்து பதான் களமிறங்கினார். இந்த ஜோடியின் மூலம் இந்திய அணி 49.1 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 289 ஓட்டங்கள[illegible] பெற்று 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இதில் யுவராஜ் 6 பவுண்டரிகள் அடங்கலாக 63 ஓட்டங்களுடனும், பதான் ஒரு ஓட்டத்துடன் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் மஃமூத், கபீர் அலி இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.



இந்த ஆட்டத்தின் நாயகனாக ஸ்ரீசந்தும், ஆட்டத் தொடர் நாயகனாக யுவராஜ்சிங்கும் தெரிவாகினர்.

7 போட்டிகளைக் கொண்ட இந்தத் தொடரில் - ஏற்கனவே முதல் 4 போட்டிகளிலும் தொடர்ச்சியாக வெற்றிபெற்று இந்திய அணி தொடரைக் கைப்பற்றியிருந்தது. 5ஆவது போட்டி மழை காரணமாகக் கைவிடப்பட்டது. 6ஆவது போட்டியில் இங்கிலாந்து வெற்றிபெற்றது.



நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டியில் வெற்றிபெற்று 5:1 என்ற அடிப்படையில் இந்தியா தொடரைக் கைப்பற்றியது.

விளையாட்டு

# செஞ்சூரியன் டெஸ்டில் தென்னாபிரிக்கா 8/266



செஞ்சூரியன்

தென்னாபிரிக்க - நியூஸிலாந்து அணிகளுக்கிடையே செஞ்சூரியனில் நேற்றுமுன்தினம் தொடங்கிய முதலாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 266 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க [illegible]ணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி அந்த அணியின் சிமித்தும், கிப்ஸும் தொடக்க ஆட்டக்காரர்களாகக் களமிறங்கினர்.

இதில் கிப்ஸ் ஸ்கோர் 16ஐத் தொட்டபோது - 6 ஓட்டங்களுடன் மில்ஸ் வீசிய பந்தில் போல்டானார்.

அடுத்து டிப்பென்னர் களமிறக்கப்பட்டார். மறுமுனையில் ஆடிகொண்டிருந்த சிமித், 6 பவுண்டரிகள் அடங்கலாக 45 ஓட்டங்களைப் பெற்று பிராங்ளின் வீசிய பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அவரையடுத்து கலிஸ் களமிறங்கினார். அந்தவேளை, 10 பவுண்டரிகள் அடங்கலாக 52 ஓட்டங்களைப் பெற்றிருந்த டிப்பென்னர், மில்ஸ் வீசிய பந்தை புல்ரனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய பிறின்ஸ், 9 ஓட்டங்களைப் பெற்று மில்ஸ் வீசிய பந்தை ஸ்ரைரிஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இந்தநிலையில் டி-வில்லியர்ஸ் களமிறங்க, மறுமுனையில் 7 பவுண்டரிகள் அடங்கலாக 38 ஓட்டங்களைப் பெற்றிருந்த கலிஸ், பிராங்ளினின் பந்தில் போல்டானார்.

அடுத்து பௌச்சர் களமிறங்க, 27 ஓட்டங்களைப் பெற்றிருந்த டி-வில்லியர்ஸ், பிராங்ளினின் பந்தில் போல்டானார்.

அவரையடுத்து பொலக் களமிறக்கப்பட்டார். அந்தவேளை, 18 ஓட்டங்களைப் பெற்றிருந்த பௌச்சர், மார்ட்டின் வீசிய பந்தை பிளெமிங்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.


தொடர்ந்து போஜே களமிறங்க, 4 பவுண்டரிகள் அடங்கலாக 24 ஓட்டங்களைப் பெற்றிருந்த பொலக், மில்ஸ் வீசிய பந்தை ஸ்ரைரிஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரையடுத்து ஸ்ரெய்ன் களமிறக்கப்பட்டார். நேற்றுமுன்தினம் ஆட்டநேரமுடிவில் தென்னாபிரிக்க அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 266 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதில் போஜே 20, ஸ்ரெய்ன் 8 ஓட்டங்களுடன் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் மில்ஸ் 4, பிராங்ளின் 3, மார்ட்டின் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

# இரண்டாவது டெஸ்ட் போட்டி; பரிதாப நிலையில் பங்களாதேஷ்



சிட்டகொங்

அவுஸ்ரேலிய - பங்களாதேஷ் அணிகளுக்கிடையே சிட்டகொங்கில் நேற்று ஆரம்பமான இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணி 197 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி களமிறங்கிய பங்களாதேஷ் அணிக்கு ஆரம்பமே சறுக்கலாக அமைந்தது. தொடக்கத்தில் களமிறங்கிய ஜாவிட் ஓமர் - நபீஸ் ஜோடியில் - ஸ்கோர் 0 ஆக இருக்கும் போதே நபீஸ், ஜிலெஸ்பி வீசிய பந்தை லீயிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய ஹபிபுல் பசார் 9 ஓட்டங்களைப் பெற்று ஜிலெஸ்பி வீசிய பந்தை ஜக்கஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரையடுத்து ரஜின் சாலே களமிறங்க, 2 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஓமரையும், ஜிலெஸ்பி எல்.பி.டபிள்யூ முறையில் வெளியேற்றினார்.

தொடர்ந்து களமிறங்கிய அஷ்ரபுல் 6 ஓட்டங்களைப் பெற்று வோனின் பந்தில் ஹைடனிடம் பிடிகொடுத்தும், அப்ரப் அகமட் 18 ஓட்டங்களைப் பெற்று வோன் வீசிய பந்தை கில்கிறிஸ்டிடம் பிடிகொடுத்தும் ஆட்டமிழந்தனர்.

இந்தவேளை காலித் மசூத் களமிறங்க சிறப்பாக ஆடி 9 பவுண்டரிகள் அடங்கலாக 71 ஓட்டங்களைப் பெற்றிருந்த ரஜின் சாலே, மக்கில் வீசிய பந்தில் போல்டானார்.


அவரையடுத்து களமிறங்கிய ரபீக் 19 ஓட்டங்களைப் பெற்று மக்கில் வீசிய பந்திலும், மொட்ராசா 4 ஓட்டங்களைப் பெற்று குலென் வீசிய பந்திலும், அப்துர் ரசாக் 15 ஓட்டங்களைப் பெற்று மக்கில் வீசிய பந்திலும் ஆட்டமிழந்து வெளியேறினர்.

இறுதியாகக் களமிறங்கிய ஹுசைன் ஓட்டமெதையும் பெறாமல் வோன் வீசிய பந்தை ஜிலெஸ்பியிடம் பிடிகொடுத்தும் ஆட்டமிழந்தார்.

இதனால் 197 ஓட்டங்களுக்குள் பங்களாதேஷ் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் காலித் மசூத் 34 ஓட்டங்களுடன் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் ஜிலெஸ்பி, வோன், மக்கில் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், குலென் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து அவுஸ்ரேலிய துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. அந்த அணிக்கு ஹைடன் - ஜக்கஸ் ஜோடி நல்ல அடித்தளத்தை இட்டுக் கொடுத்தது.



ஸ்கோர் 67ஐத் தொட்டபோது - 5 பவுண்டரிகள் அடங்கலாக 29 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஹைடன் - மொகமட் ரபீக் வீசிய பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்து ஜிலெஸ்பி களமிறக்கப்பட்டார். நேற்றைய ஆட்டநேரமுடிவில் அவுஸ்ரேலிய அணி 1 விக்கெட்டை இழந்து 76 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதில் ஜக்கஸ் 3 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 38, ஜிலெஸ்பி 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தனர்.

# நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு 24 மணிநேர மின் வழங்க கோரிக்கை

நெடுந்தீவு —

நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு 24 மணி நேர மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு நெடுந்தீவு வைத்திய அதிகாரி, யாழ். அரசாங்க அதிபர், பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரிடம் மகஜர் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்தவாரம் கியூமெடிக்கா நிறுவனத்தால் வழங்கப்பட்ட அம்புலன்ஸ் படகு கையளிப்பு நிகழ்வுக்கு வருகை தந்த அரச அதிபரிடமே தமது தேவைகள் அடங்கிய மகஜரை நெடுந்தீவு வைத்திய அதிகாரி கையளித்தார்.

பழம்பெருமை வாய்ந்த வைத்தியசாலை கட்டட கூரைகள் மற்றும் கதவுகள், யன்னல்கள் என்பன திருத்தம் செய்யப்படவேண்டுமெனவும், நோயாளர் விடுதிகளில் உள்ள மலசலகூடங்கள் திருத்தியமைத்தல், சவச்சாலை திருத்தம் செய்தல் என்பவற்றுடன் - வைத்தியசாலைக்கான மின் இணைப்புகள் முற்றாக திருத்தப்படவேண்டுமெனவும், வைத்தியர்களது விடுதிகள் திருத்தப்படவேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதேவேளை, சிறுவர்களுக்கான விடுதி மற்றும் தாதியர்கள், மருத்துவ மாது, மருந்தாளர், உணவு அறை மற்றும் ஊழியர்களுக்கான மலசலகூடம், குளியலறை என்பனவும் புதிதாக அமைக்கப்படவேண்டும் எனவும் கோரப்பட்டது.

தற்போது இலங்கை மின்சார சபையால் வழங்கப்பட்டுவந்த மின்சாரம் இரவு 11 மணி முதல் அதிகாலை 5 மணிவரை வழங்கப்படுவதில்லை. இதனால் இவ்வேளையில் ஏற்படும் அவசர மருத்துவ சேவைகள் மண்ணெண்ணெய் விளக்குடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே, இந்த வேளைகளில் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (113)

# யாழ்.நகர் பகுதிகளில் படையினர் சோதனை!

யாழ்ப்பாணம் —

யாழ்.நகரின் பிரதான வீதிகள் பலவற்றில் படையினர் போக்குவரத்தில் ஈடுபட்டவர்களை திடீர் சோதனையிட்டதால் பொதுமக்கள் மத்தியில் பெரும் பயப்பீதி தோன்றியுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை முதல் பிற்பகல் வரையும் நேற்றும் படையினர் நகரின் பிரதான வீதிகளில் போக்குவரத்தில் ஈடுபட்டவர்களை சோதனைக்குட்படுத்தியதோடு விசாரணைக்கும் உட்படுத்தியிருந்தனர். அடையாள அட்டையைக் காண்பித்த பின்னரே இவர்கள் தொடர்ந்து போக்குவரத்தில் தொடர்ந்து ஈடுபட அனுமதிக்கப்பட்டனர்.

சோதனையிட்ட படையினர் அடையாள அட்டை இல்லாது பயணம் செய்த நபர்களை நீண்ட நேரமாக தடுத்து வைத்து விசாரணை செய்த பின்னரே விடுவித்தனர்.

நாவலர் வீதி, ஆஸ்பத்திரி வீதி, ஸ்ரான்லி வீதி, கே.கே.எஸ் வீதி, கஸ்தூரியார் வீதி போன்ற வீதிகளிலே படையினர் போக்குவரத்தில் ஈடுபட்டவர்களை சோதனையிட்டதுடன் மோட்டார் சைக்கிள் உட்பட அனைத்து வாகனங்களின் பாகங்களும் கழற்றப்பட்டு சோதனையிட்டதால் போக்குவரத்தில் ஈடுபட்டவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

# மனவிருத்தி சிறுவர் பாடசாலைக்கான புதிய கட்டடம் கோண்டாவிலில் திறப்பு





கோண்டாவில் —

கோண்டாவில் - சிவபூமி மனவிருத்தி சிறுவர் பாடசாலையின் புதிய மூன்று மாடிகளைக் கொண்ட கட்டடம் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியளவில் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார், ஓய்வுநிலைப் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, சிவபூமி பாடசாலை செயலாளர் சதாசிவ ஐயர் ஆகியோர் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

தொடர்ந்து இசையாசிரியர் எஸ்.சிவஞானராஜாவின் இறைவணக்கத்துடன் ஆரம்பமான நிகழ்வில் - லண்டனில் வசிக்கும் மருதனார் மடத்தைச் சேர்ந்த சிவசக்தி சிவநேசனின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட மண்டபத்தை அவர்களுடைய பெற்றோரான ஆசிரியர் சிவப்பிரகாசபிள்ளை அங்கயற்கண்ணி தம்பதியர் திறந்துவைத்தனர்.

தொடர்ந்து லண்டனில் வசிக்கும் கொட்டடியைச் சேர்ந்த கா.விஜயந்தன் குடும்பத்தினரின் நிதியுதவியுடன் கட்டப்பட்ட முதலாவது மாடியை அவர்களது குடும்ப உறுப்பினர் விஜயந்தன் சத்தியபாமா திறந்து வைத்தார்.

அமெரிக்கா - புளோறிடாவில் வசிக்கும் சுன்னாகம் கந்தரோடையைச் சேர்ந்த வைத்திய கலாநிதி க.தேவகாந்தன் குடும்பத்தினரது நிதியுதவியுடன் கட்டப்பட்ட இரண்டாவது மாடியை ஆவரங்கால் சிவசக்தி மண்டப ஸ்தாபகர் வே.சிவசுந்தரம் திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் ஆறு. திருமுருகன் தலைமையில் இடம்பெற்றது. வரவேற்புரையைத் தொடர்ந்து நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் ஆசியுரை செய்தி வழங்கினர். தொடர்ந்து பிரதம சிறப்பு விருந்தினர்களின் உரைகள் இடம்பெற்றன.

இதனைத் தொடர்ந்து சிவபூமி மாணவர்களது கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் பெற்றோர்கள், மாணவர் கள், கல்விசார் அறிஞர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். (82)

## மாதர் சங்கத்துக்கு புதிய மாடிக்கட்டடம்

யாழ்ப்பாணம் —

யாழ். ஈச்சமோட்டை மாதர் முன்னேற்ற சங்கத்துக்கு புதிய இரண்டு மாடி கட்டடம் நிர்மாணம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஈச்சமோட்டை சனசமூக நிலையம் அமைந்துள்ள மைதானத்தில் ஈச்சமோட்டை மாதர் முன்னேற்ற சங்கத்துக்கான மாடிக்கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டு கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. (58)

## கடற்தொழில் சங்கங்கள் ஒன்றாக இணைப்பு

தாளையடி —

மாதகல் கிராமத்தில் இதுவரை தனித்தனியாக இயங்கி வந்த புனித தோமையார், புனித சூசையப்பர், லூர்துமேரி, உதயதாரகை, இராஜராஜேஸ்வரி, துறைமுக விநாயகர் ஆகிய கடற்தொழிலாளர் சங்கங்கள் ஆறும் ஒன்றாக இணைக்கப்பட்டு ஒரே சங்கமாக இயங்கி வருவதாக வலி.தென்மேற்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் செயலாளர் க.இருதயதாஸ் தெரிவித்தார். (21)

# ஜப்பானிய நட்புறவுச் சங்கத்தின் இலங்கை பிரதிநிதி யாழ். வருகிறார்

தாளையடி —

ஜப்பான் செஞ்சிலுவைச் சங்க இளைஞர் நட்புறவுச் சங்கத்தின் நிதிப் பங்களிப்புடன் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக்கிளை, பருத்தித்துறை வடமராட்சி கிழக்கு பிரிவுகளில் 10 பாடசாலைகளில் 12 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கணினி கற்கைநெறி, ஆங்கிலக் கற்கைநெறிகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளது.

இதன் ஆரம்ப நடவடிக்கைகளைப் பார்வையிடுவதற்கென ஜப்பானின் செஞ்சிலுவைச் சங்க இளைஞர் நட்புறவுச் சங்க இலங்கைக்கான பிரதிநிதி மியாக்கி ரக்காக்கோ இரண்டு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

இன்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் வருகை தரும் இவர், காலை 11 மணிக்கு பருத்தித்துறை பிரிவில் உள்ள 5 பாடசாலை அதிபர்களைச் சந்தித்து மேற்குறிப்பிட்ட கற்கை நெறிகள் குறித்து கலந்துரையாடவுள்ளார்.

அத்துடன் - இன்று மாலை 3 மணிக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளையும், மாலை 4 மணிக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக்கிளை ஆளுநர் சபை உறுப்பினர்களையும் சந்திக்கவுள்ளார்.

நாளை காலை 9 மணிக்கு வடமராட்சி கிழக்குப் பிரிவுக்குச் செல்லும் மியாக்கி ரக்காக்கோ தெரிவுசெய்யப்பட்ட ஐந்து பாடசாலை அதிபர்களையும் அந்தப் பாடசாலைகளில் வைத்து கலந்துரையாடவுள்ளார்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க பருத்தித்துறை பிரிவில் சித்திவிநாயகர் வித்தியாலயம், கலட்டி றோமன் கத்தோலிக்க ஆண்கள் பாடசாலை, சென்.தோமஸ் பெண்கள் பாடசாலை, சைவப்பிரகாச வித்தியாலயம், கற்கோவளம் மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை என்பனவும்

வடமராட்சி கிழக்குப் பிரிவில் செம்பியன்பற்று அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை, மருதங்கேணி இந்து தமிழ்க்கலவன் வித்தியாலயம், உடுத்துறை மகா வித்தியாலயம், ஆழியவளை இலங்கைத் திருச்சபை தமிழ்க்கலவன் வித்தியாலயம் என்பனவும் கணினிக் கற்கை நெறி , ஆங்கிலக்கற்கை நெறி கற்பிப்பதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன. (21)

## வருடாந்த பொதுக்கூட்டம்

தாளையடி —

காரைநகர் சாம்பலோடை அம்பாள் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் நாளை மறுதினம் காலை 10.30 மணிக்கு சங்கப் பணிமனையில் தலைவர் க.இராஜச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் சி.தவரட்ணம் பிரதம விருந்தினராகவும், சுழிபுரம் கடற்தொழில் பரிசோதகர் எஸ்.மகேஸ்வரன், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.சண்முகநாதன், சம்மேளன செயலாளர் க.சூரியகுமாரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (21)

# கீரிமலைக்கு செல்வதற்கு படையினர் அனுமதி மறுப்பு

பன்னாலை —

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்துக்குச் செல்வதற்கும், அங்கு பிதிர்க்கடன்களை நிறைவேற்றுவதற்கும் படையினர் அனுமதி மறுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குடாநாட்டிலுள்ள பெருமளவான இந்துக்கள் பிதிர்க்கடன்களை நிறைவேற்றுவதற்கும், அஸ்தியை கடலில் கரைப்பதற்காகவும் கீரிமலை கடலுக்குச் செல்வது வழமையாகும்.

இந்த நிலையில், தற்போது கீரிமலைக்குச் செல்ல - இராணுவத்தினர் அனுமதி மறுத்து வருவதால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் ஏராளமான மக்கள் பிதிர்க்கடன்களையும், அந்தியேட்டிக் கிரியைகளையும் நிறைவேற்ற முடியாமல் உள்ளதாகவும் விசனம் தெரிவித்தனர். (72)

# பட்டதாரி ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம் —

இலங்கையில் கடந்த காலங்களில் பட்டதாரி நியமனம் மூலம் ஆசிரியர் நியமனம் பெற்ற பட்டதாரிகளுக்கு 3 மாதகாலம் பயிற்சி வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், கொழும்பு, பேராதேனியா ஆகிய பல்கலைக்கழக கல்வித்துறையுடனும், திறந்த பல்கலைக்கழக கல்வித்துறையின் அனுசரணையுடனும் இந்தப் பயிற்சி மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

ஏற்கனவே கல்வியியல் டிப்ளோமா கற்றுக்கொண்டு இருப்பவர்களும், கல்வியியல் டிப்ளோமா நெறிக்கு பதிவை மேற்கொண்டவர்கள் தவிர ஏனைய பட்டதாரி ஆசிரியர்கள் தமது வலய கல்விப்பணிப்பாளரூடாக இந்த மாதம் 27 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்களை அனுப்புமாறு அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (110)

# வறிய மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கல்

யாழ்ப்பாணம் —



யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் இயங்கி வரும் சமூக அபிவிருத்தி மன்றம் வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள மாண வர்களுக்கு சைக்கிள்களை வழங்கிவருகிறது.

இதன்படி - இந்த மன்றம் நேற்று முன்தினம் 150 ஆவது சைக்கிளை மன்ற அலுவலகத்தில் வைத்து மாணவி ஒருவருக்கு வழங்கியது.

சமூக அபிவிருத்தி மன்றத் தலைவி நவநீதம் ஜெகதீசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - மங்கள விளக்கை அவுஸ்ரேலியாவிலிருந்து வருகைதந்த ஜெகதா பிரிதிவிராஜ் ஏற்றிவைத்ததுடன், 150 ஆவது சைக்கிளையும் வறுமைக்கோட்டுக்குட்பட்ட மாணவி ஒருவரிடம் கையளித்தார்.

அத்துடன் இன்னும் 100 மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளதாகவும் மன்றத் தலைவி தெரிவித்தார்.

இந்த நிறுவனத்திலுள்ள கழக உறுப்பினர்களுக்கு கணக்கியல் பயிற்சி நெறியும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# க.பொ.த.உயர்தர பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் - 2006

## புவியியல் I - (செய்முறைப் புவியியல்)

பகுதி 1 இலிருந்து முதலாவது வினாவையும் பகுதி 2 இலிருந்து இரண்டாவது வினாவையும் பகுதி 3,4 ஆகியவற்றிலிருந்து ஒவ்வொரு வினாவையும் தெரிந்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக

### பகுதி I




(01) இலங்கையின் நிலஅளவைத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட 1:50000 எனும் அளவுத்திட்டத்திலமைந்துள்ள மாத்தறை இட விளக்கப்படத்தின் ஒரு பகுதி தரப்பட்டுள்ளது. அதனை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.

1) தேசப்படத்தில் 1,2,3,4,5,6 என இலக்கமிடப்பட்டுள்ள இடங்களில் காணப் படும் அம்சங்கள் எவையென பின்வரும் தொகுதியிலிருந்து தெரிந்து ஒழுங்கு முறையில் எழுதுக. (வீட்டுத்தோட்டம், காடு, சமவுயரக்கோடு,புல்வெளி, முனை, கடற்கரை, ஆற்றுமுகம், அமைக்கப்படும் பிரதேசம்,ஆழி)
2) A 2 வீதியில் G-H வரையான நீளத்தைக் கிலோமீற்றரில் தருக.
3) வெலிகமப் பிரதேசத்தில் நீர் இனங்காணும் நான்கு வகையான வீதிகளைக் குறிப்பிட்டு, குறியீட்டையும் தருக.
4) இந்தப் பிரதேசத்தில் கூடுதலாகச் செய்கை பண்ணப்படும் பயிர் ஒன்றைக் குறிப்பிட்டு இந்தப் பயிரின் பரப்பளவைக் கட்டுப்படுத்தும் பிரதான காரணியையும் குறிப்பிடுக.
5) M என்ற எழுத்தால் குறிப்பிடும் வட்டமிடப்பட்ட பண்பாட்டம்சம் யாது?
6) நாற்பக்கல் I இல் காணப்படும் நான்கு பண்பாட்டம்சங்களை உரிய நிறங்கள் குறியீட்டுடன் தருக.
7) நாற்பக்கல் II , III இல் காணப்படும் குடியிருப்புகள் எவ்வகையானவை. இந்தக் குடியிருப்புப் பாங்கைத் தீர்மானித்த ஒவ்வொரு காரணியைக் குறிப்பிடுக.
8) படத்தில் B,C,D என மூன்று வலயங்கள் பிரித்துக் காட்டப்பட்டுள்ளது. இந்த ஆலயங்களின் பௌதிகப் பண்பாட்டம்சங்கள் தொடர்பான ஒவ்வொரு விவரணத்தை எழுதுக.
9) நாற்பக்கல் 2 இல் காட்டப்பட்டுள்ள பகுதியை அதன் இருமடங்காகப் பெருப்பித்து வரைந்து நேர்கோட்டு அளவுத்திட்டத்தையும் வரைக.
10) 10cm x 10 cm சதுரத்தினுள் கீழ்வரும் விவரணத்தை 1:50000 என்ற அளவுத்திட்டத்தில் வரைக. வழக்கமான குறியீடுகள், நிறங்களைப்பயன்படுத்துக. சமவுயரி இடைவெளி 20 மீற்றர்களாகும்.

இந்தப் பிரதேசத்தின் வடமேற்கு மூலையிலிருந்து 1.0 கிலோமீற்றர் வட எல்லையில் ஆரம்பிக்கும் பிரதான ஆறு - தென்மேற்கு மூலையிலிருந்து 2.5 கிலோமீற்றர் தென் எல்லையில் வெளியேறுகிறது. வடகிழக்கு மூலையிலிருந்து மூன்று கிலோமீற்றர்கள் கிழக்கு எல்லையூடாக பிரவேசிக்கும் முதலாவது கிளையாறு தென் எல்லையிலிருந்து 2.5 கிலோமீற்றர்கள் வடக்காகப் பிரதான நதியைச் சேர்கிறது. தென்கிழக்கு மூலையிலிருந்து 1.5 கிலோமீற்றர்கள் கிழக்கு எல்லையில் பிரவேசிக்கும் இரண்டாவது கிளையாறு தென்எல்லையிருந்து 1.0 கிலோமீற்றர்கள் வடக்காகப் பிரதான நதியைச் சேர்கிறது.

பிரதான உயர்நிலம் வடகிழக்கு மூலையிலும் தென்மேற்கு மூலையிலும் அமைந்துள்ளது. பொதுவாக 100 மீற்றர்களுக்கு மேற்பட்ட உயரமுடைய இப்பிரதேசம் தொடரலைப் பாங்கான நிலமாகும். வடமேற்கு மூலையிலிருந்து 2.0 கிலோமீற்றர்கள் வடஎல்லை வரையும் 1.5 கிலோமீற்றர்கள் கிழக்கு எல்லை வரையும் அமைந்துள்ள முதலாவது பாறைப்பகுதி 100 மீற்றர்களிலிருந்து 160 மீற்றர்கள் வரை அமைந்துள்ள பாறைப்பகுதி தென்மேற்கு மூலையிலிருந்து 2 கிலோமீற்றர்கள் தென்எல்லை வரையும் அமைந்துள்ளது. இப்பகுதி 140 மீற்றர்கள் வரை உயர்ந்து செல்கிறது.

பிரதான நதியின் மேற்குப்பக்கமாக பெருந்தெரு ஒன்று நதிக்குச் சமாந்தரமாகச் செல்கிறது. வீதியில் இருமருங்கிலும் குடியிருப்புகள் அமைந்துள்ளதோடு இந்தக் குடியிருப்புக்கள் ஒற்றையடிப் பாதைகளால் தொடர்புபட்டுள்ளது. கிளை நதியின் இருமருங்கிலும் பரவலாகச் சிறிய நெல்வயல்களும், அதனைச் சார்ந்து சிறுசிறு குளங்களும் அமைந்துள்ளன. உயர் நிலப்பகுதிகள் இரண்டும் காடுகளால் மூடப்பட்டுள்ளது. நெல்வயலையும், குளங்களையும் சார்ந்து குடியிருப்புகள் அமைந்துள்ளன. குடியிருப்பில் பௌத்த ஆலயமும் பாடசாலையும் அமைந்துள்ளது.

### பகுதி II

(02) உலகப் புறவரிப்படத்தில் பின்வருவனவற்றைக்குறித்துப் பெயரிடுக.

அ. அலூசியன் தீவுகள், தெக்ரான், லீனாநதி, சட்டாஹிப், டோக்கியோ, கனேரிஸ் நீரோட்டம், அற்றகாமா பாலைவனம், அல்ப்ஸ் மலைகள், கடகக்கோடு, புளோரிடா குடாநாடு, மாலாவி, நெதர்லாந்து, பிறீமாண்டில், சாட்ஏரி, ஹோக்லாந்து தீவு

ஆ. 1) கடந்த மாதம் (பஸ்கி 2006) பாரிய நிலநடுக்கத்தால் பாதிப்படைந்த ஆசியநாடு
2) மார்ச் என்ற நதியின் பெருக்கெடுப்பால் வெள்ளப்பெருக்கு அழிவைச் சந்தித்த ஐரோப்பிய நாடு
3) ஈக்குவடோரின் தலைநகரம்
4) உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைமைச் செயலகம் அமைந்துள்ள நகரம்
5) ஐக்கிய அமெரிக்காவின் இலத்திரனியல் ஆராய்ச்சி முக்கோணம் அமைந்துள்ள மாநிலம்

### பகுதி III

03) அ) நில அளவீட்டுத்திட்டப்படத்தினதும் தேசப்படத்தினதும் பயன்பாடுகளைச் சுருக்கமாக ஒப்பிடுக.

ஆ) எளிய சங்கிலி நாடா அளவையின் முக்கிய நோக்கத்தையும் பயன்பாட்டையும் சுருக்கமாகக் குறிப்பிடுக.

இ) நில அளவீட்டில் பயன்படுத்தப்படும் பத்து உபகரணங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

ஈ) நில அளவீட்டின் போது சங்கிலிக் கோட்டிலிருந்து குத்தளவுகள் எடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் குத்தளவுத்தூரம் மிக அதிகமாக இருந்தால், எவ்வாறு குத்தளவை மேற்கொள்வீர் என்பதை புனையா வரிப்படங்களின் உதவியுடன் விபரிக்குக

04) அ) எறியங்கள் தொடர்பான சிறிய விளக்கக் குறிப்புரையும், அது தொடர்பான ஒரு வினாவும் தரப்பட்டுள்ளது. அதை மிகக் கவனமாக வாசித்து வினாவுக்குரிய விடையை ஒரு வசனத்தில் உமது விடைத்தாளில் எழுதுக. ஒவ்வொரு வினாவுக்கும் ஒரு புள்ளி மட்டுமே வழங்கப்படும்.

1) கோளத்திலுள்ள அகல நெடுங்கோடுகளை ஒளியினால் தட்டையான தளத்தில் நிழல்களாக எறியச் செய்வதன் மூலம் வெவ்வேறு எறியங்கள் பெறப்படுகிறது என்ற கருத்தும் உண்டு

வினா: பூகோளத்தின் மேற்பரப்பானது மையத்தானத்தின் எதிரடியிடத்திலிருந்து ஒரு தளத்தில் எறியப்படும்போது எந்த வகை எறியம் பெறப்படுகிறது.

2) எந்த ஒரு எறியத்திலும் தனியாக அகலக்கோடு அல்லது நெடுங்கோடு அல்லது பிறகோடுகள் மட்டும் ஒத்த அளவுத்திட்டத்தில் பூகோளத்து நீளமுள்ளனவாக இருக்கும். ஏனைய கோடுகள் மிக நீளமாக அல்லது மிகக் குறுகியதாக இருக்கும்.

வினா:- எறியமொன்றில் எல்லா அகல நெடுங்கோடுகளும் உண்மையான அளவுத்திட்டத்தில் ஏன் அமைவதில்லை?

3) திசைகளைக் காட்டுவதில் நேருரு எறியங்கள் மிகச்சிறந்தவை.

வினா:- நேருரு எறியம் என்பதன் கருத்து யாது?

4) விமானிகளின் பெருவட்ட வழிகளைக் குறிப்பதற்கு நிழல்கடிகார உச்சியெறியம் பொதும் பயன்படுகிறது.

வினா:- பெருவட்டம் என்பது யாது?

5) உலகப் படங்களை வரைவதற்கு மேக்கற்றோவின் எறியம் சிறந்தது. எனினும், பரந்த பகுதிகளின் உருவங்கள் பெரிதும் திரிபடைகிறது.

வினா:- உருவத் திரிபுக்கான காரணம் யாது?

ஆ. பின்வரும் வினாக்களுக்கான சுருக்கமான விடைதருக.
1) தேசப்படங்களுக்கும் எறியங்களுக்கும் இடையிலான தொடர்பு யாது?
2) உச்சியெறியங்கள் யாவும் திசை வில்லெறியங்கள் என ஏன் அழைக்கப்படுகின்றன?
3) ஓர் எறியத்தில் நேருருவத்தன்மை காணப்படவேண்டுமாயின், அவ்வெறியம் எத்தகைய இயல்பினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4) சமபரப்பு உலகப்படங்களில் உருவத்தைப் பேணுவதற்கு எவ்வழிகளைக் கையாண்டுள்ளார்கள்.

இ. 1) ஓர் எறியத்தில் சமபரப்புத்தன்மை பேணப்படுவதற்கான அடிப்படைகள் எவை?
2) சமபரப்புத்தன்மையுடைய எறியங்களை வகைப்படுத்துக?
3) இவ்வெறியங்களில் சமபரப்புப் பேணப்பட்டிருக்கும் பாங்கை சுருக்கமாக விளக்குக?

### பகுதி IV

05) சார்க் நாடுகளின் 2000 ஆம் ஆண்டுக்கான முதலீட்டில் உள்நாட்டுச் சேமிப்பும் வெளிநாட்டு உதவியும் தொடர்பான தரவுகள் அட்டவணை I இல் தரப்பட்டுள்ளது.

(சார்க் நாடுகளின் முதலீடு 2000 - மில்லியன் அமெரிக்க டொலர்)

அட்டவணை

| நாடுகள் | வெளிநாட்டு உதவி மில்.அமெ.டொலர் | உள்நாட்டுச் சேமிப்பு மில்.அமெ.டொலர் |
|---|---|---|
| இந்தியா | 4320 | 916 |
| பாகிஸ்தான் | 3255 | 823 |
| பங்களாதேஷ் | 1080 | 460 |
| நேபாளம் | 1560 | 310 |
| இலங்கை | 3090 | 1016 |
| பூட்டான் | 1017 | 325 |
| மாலைதீவுகள் | 815 | 295 |

மூலம் - உலக வங்கி அறிக்கை - 2001

1) பொருத்தமான பார்(சலாகை) வரைபை வரைந்து முதலீட்டில் உள்நாட்டுச் சேமிப்பின் பங்குபற்றிய விபரத்தைச் சமர்ப்பிக்குக?
2) சார்க் நாடுகளின் வெளிநாட்டு உதவி, உள்நாட்டுச் சேமிப்புத் தொடர்பாக அவதானிக்கக் கூடிய மூன்று முக்கிய இயல்புகளைக் குறிப்பிடுக?
3) இந்தத் தரவைச் சமர்ப்பிப்பதற்குப் பொருத்தமான வேறு இரண்டு வரைபட முறையைப் பெயரிடுக?
4) நீர் பெயரிட்ட வரைபட முறைகளின் இயல்பையும் பயன்பாடுகளையும் புனையா வரைபடங்களின் உதவியுடன் விபரிக்குக?

06) 1) அட்டவணை 2 இல் தரப்பட்டுள்ள தரவினைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

1. இடை 2. இடையம் 3.ஆகாரம் 4. வீச்சு
5.காலணைகள் 6. காலணை விலகல் 7.காலணை வீச்சு

# க.பொ.த.உயர்தர பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் - 2006

அட்டவணை II

நேர்ந்தெடுக்கப்பட்ட இலங்கையின் நதிகளின் நீளங்கள் கிலோமீற்றரில்

| நதிகள் | நீளம் கிலோமீற்றர் | நதிகள் | நீளம் கிலோமீற்றர் |
|---|---|---|---|
| மகாவலிகங்கை | 335 | மகா ஓயா | 129 |
| அருவி ஆறு | 164 | களுகங்கை | 117 |
| கலாஓயா | 148 | கிரிந்தி ஓயா | 116 |
| களனி கங்கை | 145 | கும்புக்கன் ஓயா | 114 |
| யான்ஓயா | 142 | மாணிக்ககங்கை | 113 |
| தெதுறுஓயா | 138 | ஜின்கங்கை | 113 |
| வளவை கங்கை | 135 | மீ ஓயா | 109 |
| மாதுறு ஓயா | 134 | கல்லோயா | 108 |

மூலம் : இலங்கை நில அளவைத் திணைக்களம். 1998

II) கணிக்கட்பட்ட மதிப்புகளைப்பயன்படுத்தி இலங்கை நதி நீளங்களின் மையப்போக்கு, சிதறல் பாங்கு , பரம்பலின் தன்மை என்பவற்றை விபரிக்குக.

07) அ பின்வரும் புவியியல் அம்சங்களை வெளிப்படுத்துவதற்கு பொருத்தமான படவரைகலையைப் பெயரிடுக.

1) இலங்கையின் கடந்த பதினைந்து ஆண்டுகளின் குடிசன வளர்ச்சி வீதம்.
2) அண்மைக்காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கு இடம்பெயர்ந்து சென்ற மக்களின் எண்ணிக்கை.
3) மழை வீழ்ச்சிக்கும் பயிர்விளைச்சலுக்கும் இடையேயுள்ள தொடர்பு.
4) இலங்கை ஏற்றுமதி சார்ந்த மொத்தவருமானத்தில் பொருட்களின் பங்கீடு.
5) இலங்கையின் மாவட்டாரீதியான குடியடர்த்தி.

ஆ. இலங்கையின் வளிமண்டலவியல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட ஒரு பிரதேசத்தின் குறித்த ஒரு ஆண்டுக்கான வெப்பநிலை, மழைவீழ்ச்சியின் மாதாந்த அளவுகள் உமக்குத்தரப்பட்டுள்ளது.

இதனைச்சமர்ப்பிப்பதற்கு நீர் பயன்படுத்தக்கூடிய இரண்டு படவரைகலை முறையைப் பெயரிடுக (உதாரணம்:திருகோணமலை மாவட்டத்தின் 2001 ஆம் ஆண்டுக்கான ஜனவரி தொடக்கம் டிசெம்பர் வரையான வெப்பநிலை, மழைவீழ்ச்சி அளவுகள்)


இ. நீர் பயன்படுத்திய படவரைகலையின் பயன்பாடுகளை சுருக்கமாக விபரிக்குக

ஈ. வரைபடம் 1 இல் 1991 தொடக்கம் 1999 வரையான காலப்பகுதியில் இலங்கையின் தேயிலை, இறப்பர் உற்பத்தி (மில். கிலோ. கிராம்.) காட்டப்பட்டுள்ளது. அதனை அவதானித்து பின்வரும் வினாக்களுக்கு விடைதருக?

1. தேயிலை ஏற்றுமதியில் இரண்டாம் இடம்பெறும் நாடு எது?
2. 125 மில்லியன் கிலோகிராமிற்கும் கூடுதலாக இறப்பர் ஏற்றுமதி செய்யப்பட்ட ஆண்டுகள் எவை?
3. 1993க்கும் 1997 க்கும் இடையில் தேயிலை ஏற்றுமதி எவ்வளவால் அதிகரித்துள்ளது?
4. தேயிலை, இறப்பர் ஏற்றுமதியின் போக்குப்பற்றிக் கூறக்கூடிய முடிவுகள் எவை?

வரைபடம் - I

இலங்கையின் தேயிலை - இறப்பர் உற்பத்தி




மூலம்: இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை - 1999

க.பொ.த.உயர்தர பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் - 2006

# புவியியல் II - (மானிடப் புவியியல்)

## மானிடப் புவியியல் - I

கீழ்க்காணும் வினாக்களுக்கான விடைகளில் சரியானது அல்லது மிகப்பொருத்தமானது என நீர் கருதும் விடையைத்தெரிவு செய்து, அந்த விடையின் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

1) மானிடப்புவியியல் என்பது
   1. மனித நடத்தை பற்றி ஆராய்வது
   2. புவியின் தன்மை பற்றி ஆராய்வது
   3. சூழலின் தன்மைகளைப் பற்றி ஆராய்வது
   4. மனித நடவடிக்கைகளின் இடஞ்சார் பரம்பலை ஆராய்வது

2) மசாய் (Masai) என்பது
   1. ஆபிரிக்காவின் நாடாவடிவக்குடியிருப்பு
   2. தென்னாபிரிக்க சிதறிய குடியிருப்பு
   3. ஆபிரிக்காவின் பச்சைக்கிராமக்குடியிருப்பு
   4. அவுஸ்ரேலியாவின் குழுமிய குடியிருப்பு

3) ஐக்கிய அமெரிக்காவின் நகரக்குவிவுகள்
   1. மெகலோ பொலிஸ்  3. மெற்றோபொலிஸ்
   2. இயோ பொலிஸ்  4. நெக்ரோ பொலிஸ்

4) குக்கிராமம் என்பது
   1. நகரவீதியோரக்குடியிருப்புகள்
   2. விருத்தியடையாத நகரக்குடியிருப்புகள்
   3. பிரதான குடியிருப்புக்களில் இருந்து விலகியிருக்கும் குடியிருப்புகள்
   4. பலசிறு கிராமங்களைக்கொண்ட அமைப்பு

5) வாழ்வாதாரப் பயிர்ச்செய்கை என்பது
   1. வர்த்தகப்பொருளாதார நோக்கில் செய்யப்படுகிறது
   2. பெரிய தோட்டங்களில் மேற்கொள்ளப்படுவது
   3. பண்டமாற்று நோக்கத்துக்காக செய்யப்படுவது
   4. வாழ்க்கைத் தேவைக்காகச் செய்யப்படுவது

6) உலகின் மக்கள் தொகை கூடிய நகரம்
   1. நியூயோர்க்  3. மும்பை
   2. வாஷிங்டன்  4. கேப்ரவுண்

7) அருகில் இந்திய புறவரிப்படத்தில் A,B,C என்ற எழுத்துக்களைக்குறிக்கும் கைத்தொழில் வலயங்கள் முறையே





   1. பீகார், மதுரை, ஒரிசா
   2. பீகார், அகமதாபாத், மதுரை
   3. பீகார், கோயம்புத்தூர், ஒரிசா
   4. பீகார், ஒரிசா, றூர்கேலா

8) ஐக்கிய அமெரிக்க மாநிலங்களின் எண்ணிக்கை
   1. 50  2. 55  3. 52  4. 53

9) இந்து சமுத்திரத்தின் நேரடிக்கடல் தொடர்பு கொண்ட நாடுகளில் இருபெரும் அமெரிக்கத்தளங்கள் உள்ளன. அந்நாடுகள்
   1. மொறிசியஸ்,பிலிப்பைன்ஸ்  3. மாலைதீவு,மொறிசியஸ்
   2. பிலிப்பைன்ஸ்,மாலைதீவு  4. சீனா, இந்தியா

10) அருகே காட்டப்பட்டுள்ள வயதுக்கூம்பிற்குப் பொருத்தமான நாடுகளின் தொகுதி
   1. ஜேர்மனி,பிரான்ஸ், டென்மார்க்
   2. ஜேர்மனி,டென்மார்க்,லக்சம்பேர்க்
   3. நோர்வே, டென்மார்க், ஸ்பெயின்
   4. பிரான்ஸ்,ஸ்பெயின்,லக்சம்பேர்க்





11) இலங்கையில் யானைகள் சரணாலயம் அமைந்துள்ள இடம்
   1. யால  3.பின்னவெல
   2. குமண  4.லகுகல

12) உலக மயமாக்கல் தொடர்பான சரியான கூற்று
   1. உலக நாடுகளை தொடர்பாடல் அடிப்படையில் மிக நெருங்க வைத்தல்
   2. உலக நாடுகளை தொழில்நுட்ப உதவி மூலம் மிக நெருங்கவைத்தல்
   3. உலகநாடுகளை சர்வதேச சந்தையில் ஒன்று சேர்த்தல்
   4. மேற்கூறிய யாவும் சரி

13) உலகின் பெரு நகரங்களின் சரியான தொகுதி
   1. ஜகார்த்தா,கன்பரா,வெலிங்டன்
   2. நியூயோர்க்,பிறேசிலியா,றிகா
   3. ஷாங்காய்,சாயோபோலோ,புவனஸ்அயர்ஸ்
   4. டோக்கியோ,சன்யோஸ்,சான்பிரான்சிஸ்கோ

14) ஐரோப்பிய நகர வளர்ச்சிக்கு அடிப்படைக்காரணி
   1. கைத்தொழிலாக்கம்  3.நாடுகாண்பயணம்
   2. உலகப்போர்கள்  4.விஞ்ஞானத்துறை வளர்ச்சி

☛ குடிப்புள்ளியியல் நிலைமாற்றக்கோட்டின் ஐந்து கட்டங்கள் கீழே வரைபடத்தில் தரப்பட்டுள்ளது




15) தென்னாசிய நாடுகளின் குடித்தொகைப்பண்புகளுக்குப்பொருத்தமான நிலை யாது
   1) I  2) II  3) IV  4) V

16) உயர்ந்த கல்வி நிலை, வேலைவாய்ப்புக்களின் தாராள நிலைமைபெற்றுள்ள கட்டம்
   1) V  2) II  3) III  4) IV

17) நிலை III இல் அடங்கும் நாடுகளின் பண்புகள்.
   1. நகராக்க விருத்தி,கைத்தொழிலாக்கநிலை
   2. தாராள உணவுநிரம்பல், விவசாய விருத்தி
   3. விவசாய விருத்தி, கல்வித்தர உயர்வு
   4. கைத்தொழிலாக்கம், தாராள உணவு நிரம்பல்

18) உலகில் இலத்திரனியல் உற்பத்தியில் விசேடமான நாடுகள்
   1. G.8  3. பெறெலெக்ஸ்
   2. NIC  4. மேற்கு ஐரோப்பா

19) உலகின் மிகப்பெரிய இரும்புருக்கு மையம்
   1. அப்பலாச்சியன்  3. றூர்
   2. பிற்ஸ்பேர்க்  4. டொனற்ஸ்

(தொடரும்)

செல்வி பத்மா கந்தசாமி B.A. Geography Hons, Dip in Edu
கொக்குவில் இந்து கல்லூரி.

# நாட்டுப்பற்றாளர் நினைவு தினம் பளைப் பிரதேசத்தில் அனுஷ்டிப்பு

பளை—

தாயக விடுதலைப்போரில் சாவடைந்த யாழ்.மாவட்ட நாட்டுப்பற்றாளர்களை நினைவு கூரும் நிகழ்வு நேற்றுமுன்தினம் பளை மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் ஆர்வலன்தலைமையில் காலை 11 மணிக்கு ஆரம்பமான இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை நாட்டுப்பற்றாளர் கிறிஸ்ரோபரின் மனைவி, யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த வ.கனகலிங்கம் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தமிழீழ தேசியக்கொடியை யாழ். மாவட்ட துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் கண்ணன் ஏற்றிவைத்தார். பொதுச்சுடரை யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பிறை ஏற்றிவைத்தார்.

அன்னை பூபதியின் திருவுருவத்துக்கான மலர் மாலையை உடுவில் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் கனியன் அணிவித்தார்.

தொடர்ந்து நாட்டுப்பற்றாளர்களின் திருவுருவப்படங்களுக்கு அவர்களின் உறவினர்கள் ஈகச்சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்தனர். தொடர்ந்து அகவணக்கம் இடம்பெற்றது.

நினைவுரையை வ.கனகலிங்கம், சிறப்புரையை யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி ஆகியோர் நிகழ்த்தினர்.

இறுதியாக நாட்டுப்பற்றாளர்களின் குடும்பங்களுக்கு நினைவுப் பொருட்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.



வவுனியா - அந்தோனியார் தேவாலயத்தில் நடைபெற்ற ''உயிர்த்த ஞாயிறு'' ஆராதனை நிகழ்வில் சில காட்சிகளைப் படங்களில் காணலாம். படம் - கனகரவி

## தற்காலிகமாக இயங்கும் பிரதேசசபையை சொந்த இடத்துக்கு மாற்றுமாறு கோரிக்கை

நெடுங்கேணி—

நெடுங்கேணி - ஒட்டுசுட்டான் பிரதேசங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளால் ஓயாத அலைகள் மூன்று நடவடிக்கை மூலம் மீட்கப்பட்ட பின்னர் அங்கு மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளனர்.

இடம்பெயர்ந்த சமயம் இவர்களது பிரதேச சபை வவுனியா நகரில் இருந்து தற்காலிகமாக கனகராயன் குளத்துக்கு மாற்றப்பட்டிருந்தது.

தற்போது நெடுங்கேணி பிரதேசத்தில் பிரதேச சபைக்கான புதிய கட்டடம் அமைக்கப்பட்டும் - இது வரை உரிய இடத்துக்கு திரும்பாமல் கனகராயன் குளத்திலேயே இயங்குவதால் நெடுங்கேணிப் பிரதேச மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அது போலவே நெடுங்கேணி மருத்துவமனைக்கான கட்டட வேலைகள் முடிந்தும் இன்று வரை அந்தக் கட்டடம் திறக்கப்படாததால் இங்குள்ள மக்கள் சீரான வசதி இன்றித்தவிக்கின்றனர். இதனால் சம்பந்தப்பட்டவர்களை விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கேட்டுள்ளனர்.

## களமுனை போராளிகளுக்கு உணவு வழங்கல்

வவுனியா—

வவுனியா - நெடுங்கேணிப் பிரதேச மக்களால் களமுனைப் போராளிகளுக்கான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

சிலோன் தியேட்டர் களமுனைக்குச் சென்ற மக்கள் களமுனைப் போராளிகளைச் சந்தித்து தாம் கொண்டு சென்ற பொருட்களைக் கையளித்தனர். அந்தப் பொருட்களை தளபதி குமரன் பெற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் களமுனைத் தளபதிகள், பொறுப்பாளர்கள் உள்ளிட்ட பெருமளவானோர் பங்குகொண்டிருந்தனர்.

## தமிழீழ சுகாதார சேவையினரால் உடனடி நடவடிக்கை குழு தெரிவு!

பூநகரி—

தமிழீழ சுகாதார சேவைகளின் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவினரால் பூநகரி - கௌதாரிமுனைப் பிரதேசத்துக்கான உடனடி நடவடிக்கை குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவின் தலைவராக க. கிருபாகரனும், செயலாளராக ச.யோகலிங்கமும், பொருளாளராக ந.மல்லிகாவும், ஆறு உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நோய் தொற்றக்கூடிய, இயற்கை அனர்த்தங்கள் ஏற்படக்கூடிய இடங்களில் தமிழீழ சுகாதார சேவைகளின் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவினரால் உடனடி நடவடிக்கைக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருவது தெரிந்ததே.

இது தமிழீழ சுகாதார சேவைகளின் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவினரால் அமைக்கப்பட்ட நான்காவது உடனடி நடவடிக்கைக் குழு என்பதுடன், ஏற்கனவே பூநகரி, செட்டியார் தரைவெளி, முட்கொம்பன், செக்காலை பிரதேசங்களிலும் இவை அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## பேராளர் சங்கம நிகழ்வு

இராமநாதபுரம்—

கிளிநொச்சி - அக்கராயன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் சங்கம நிகழ்வு நேற்று முன்தினம் ஸ்கந்தபுரம் இல.1 பாடசாலையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு அக்கராயன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் தலைமையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

## தாளையடி பிரதேசத்தில் நீச்சல் தடாகம் திறப்பு

தாளையடி—

சுவிமிங் லங்கா நிறுவனத்தின் அனுசரணையில் இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தால் வடமராட்சி கிழக்கு - தாளையடியில் நீச்சல் தடாகம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

நீச்சல் பயிற்சி ஆசிரியர் றொசாரோ தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் - மங்கள விளக்கை வடமராட்சி கிழக்கு இளையோர் செயற்பாட்டு நிறுவன இணைப்பாளர் ரங்கன், தாளையடி றோமன் கத்தோலிக்க பாடசாலை ஆசிரியர் றொபின்சன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியக்கொடியை வடமராட்சி கிழக்கு மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் தமிழரசன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து நீச்சல் தடாகத்தை சுவிமிங் லங்கா வடக்கு - கிழக்கு இணைப்பாளர் தபேசன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். காவல் துறை உறுப்பினரால் முதலாவது பயிற்சிவீரர் தடாகத்தில் இறக்கப்பட, பயிற்சி ஆசிரியரால் பயிற்சிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அடிப்படை வசதிகளற்ற நிலையில் மல்லாவி பேருந்து நிலையம்!

மல்லாவி—

மல்லாவி நகரப்பகுதியில் அமைந்த பேருந்து நிலையம் எந்தவித அடிப்படை வசதிகளுமின்றி இருப்பதால் பயணிகள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

நகர்ப்பகுதியில் அமைந்த இந்தப் பேருந்து நிலையமானது தனியார் காணியில் அமைந்துள்ளது. இங்கே குடிநீர், மலசலகூடங்கள், சீரான தரிப்பிடம் என்பன இன்மையால் பயணிகள் பல அசௌகரியங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

வசதிகள் இன்மையால் பேருந்து சாரதிகள், நடத்துனர்கள், பொதுமக்கள் ஆகியோர் பெரும் சிரமமடைகின்றனர். இந்த அடிப்படை வசதிகள் இல்லாத பேருந்து நிலையத்தை ஓர் அரச காணியில் நிர்மாணித்து, சகல வசதிகளையும் சீர்செய்ய வேண்டுமென தனியார் பேருந்து கழகத்தினர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுள்ளனர்.

இது தொடர்பாக அதிகாரிகளுக்கு தனியார் பேருந்து கழகத்தினர் அறிக்கையையும் அனுப்பிவைத்துள்ளனர்.

## பரவலாக மழை!

கிளிநொச்சி—

வன்னிப்பிரதேசத்தின் பல பாகங்களிலும் பரவலாக மழை பெய்துள்ளது. அண்மைக்காலமாக நிலவிய கடும் வெப்பம் மற்றும் கடும் வரட்சியின் பின்னர் இந்த மழை பெய்துள்ளது.

நேற்றுமுன்தினம் காலை முதல் பரவலாக இடியுடன் கூடிய மழை தொடர்ச்சியாகப் பெய்ததால் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்கொள்ள வேண்டி இருந்தது.

## கல்வி வளர்ச்சி நிலையம் அமைப்பு!

மாங்குளம்—

மாங்குளம் - செல்வராணி குடியிருப்பிலுள்ள மாணவர்களுக்கான மாலைநேர கல்வி வளர்ச்சி நிலையம் அமைப்பதற்கான முன்னோடிக் கலந்துரையாடல், கடந்த சனிக்கிழமையன்று மாலை 4 மணிக்கு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தமிழீழ மாணவர் அமைப்பின் மாங்குளம் பிரதேசப் பொறுப்பாளர் இனியவன், மாங்குளப் பிரதேச மாவீரர், போராளிகள் குடும்ப நலன்காப்பகப் பொறுப்பாளர் பிறேம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் 30 அடி கொட்டகை ஒன்று அமைத்துத் தருவதாகவும் மக்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## போராட்டத்தில் இணைவோர் நாளுக்கு நாள் அதிகரிப்பு!

கிளிநொச்சி—

தமிழர் தாயகத்தில் போராட்டத்தில் இணைவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

கடந்த சில நாட்களில் தமிழர் தாயகத்தில் பல நூற்றுக் கணக்கானோர் இணைந்துள்ளனர்.

இதன் அடிப்படையில் வவுனியா நெடுங்கேணிப் பிரதேசத்தில் அண்மைய நாட்களில் 50 பேர் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் பிறையாளனிடம் முன்வந்து இணைந்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சியில் 16 பேரும், கடந்த சில நாட்களில் 217 பேரும், முல்லைத்தீவில் 107 பேரும் தாமாக முன்வந்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணைந்துள்ளனர்.

இதேவேளை, தமிழர் தாயகத்தின் பல்வேறு பகுதிகளிலும் பெரும் எண்ணிக்கையானோர் தாமாக முன்வந்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(கு)

## முல்லைத்தீவு விவசாயிகளுக்கான நடமாடும் விவசாய சேவை ஆரம்பம்

முல்லைத்தீவு—

விவசாய, காணி, கால்நடை, நீர்ப்பாசன கடற்தொழில் அமைச்சால் முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளின் நன்மைகருதி நடமாடும் சேவை ஒன்று கடந்த புதன்கிழமை அனிஞ்சியன்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நடத்தப்பட்டது.

பாண்டியன் குளம், துணுக்காய் பிரதேச செயலர்களின் அனுசரணையுடன் முல்லைத்தீவு மாவட்ட விவசாய அபிவிருத்தித் திணைக்களத்தின் ஒழுங்கு படுத்தலில் இந்த நடமாடும் சேவை நடைபெற்றது.

முல்லைத் தீவு மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் இ.கோகுலதாசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை துணுக்காய் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் அருந் தவம் ஏற்றி வைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் துணைப்பொறுப்பாளர் சின்னண்ணா ஏற்றினார். தொடர்ந்து மங்கள விளக்கேற்றல் இடம்பெற்றது.

வரவேற்புரையை துணுக்காய் பிரதேச செயலர் நந்தகுமார் நிகழ்த்தினார். விளக்கவுரைகளை முல்லைத்தீவு மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் இ.கோகுலதாசன், முல்லைத்தீவு மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்கள உதவி ஆணையாளர் எந்திரி சிவகுமார், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் துணைப் பொறுப்பாளர் சின்னண்ணா, முல்லைத்தீவு மாவட்ட விவசாய அபிவிருத்தி அமைப்பின் தலைவர் இ. இராசையா, விவசாய காணி கால்நடை நீர்ப்பாசன கடற்தொழில் அமைச்சின் உதவிச் செயலாளர் தயானந்தன் ஆகியோர் நிகழ்த்தினர்.

சிறப்பு முதன்மை உரைகளை முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார், தமிழீழ பொருண்மியமேம்பாட்டுநிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் ஆகி யோர் நிகழ்த்தினர். தொடர்ந்து துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 10 பேருக்கு காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

இதனைமுல்லைத்தீவுமாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் உட்பட பிரமுகர்களால் வழங்கப் பட்டன.

தொடர்ந்து விவசாய கால்நடை, நீர்ப்பாசனம், கடற்தொழில், தென்னை அபிவிருத்திச்சபை ஆகியவற்றின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெற பெருமளவான மக்கள் வருகை தந்தமை குறிப்பிடத்தக்கது.

## தற்காப்பு பயிற்சி ஆரம்பம்!

வள்ளிபுனம்—

வள்ளிபுனம் பிரதேசத்தில் வடக்கு - கிழக்கு வன்தொழில்நுட்ப பணியாளர்களுக்கான தற்காப்பு பயிற்சி கடந்த 6 ஆம் திகதி ஆரம்பமாகியது.

ஐ.மாதவராசா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பொதுச்சுடரை ஊரக மேம்பாட்டு செயலாளர் சின்னத்தம்பி ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக்கொடியை பிரதேச பொறுப்பாளர் ஏற்றிவைத்தார்.

இந்தப் பயிற்சியில் 200 இற்கும் மேற்பட்ட பயிற்சியாளர்கள் கலந்து கொண்டனர்.

பயிற்சிகளை பயிற்சி ஆசிரியர்களான யூட், அமுதன் ஆகியோர் வழங்கினர். அண்மைக்காலமாக தமிழர் தாயகப் பகுதியெங்கும் தற்காப்பு போர்ப் பயிற்சிகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நமது ஈழநாடு

சிந்தனைக்கு!

பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும்.

- திருக்குறள்

## நமது நோக்கு

## அச்சுறுத்தும் விலை உயர்வு

சகல எரிபொருட்களினதும் விலைகளை அரசு ஒரே இரவில் எட்டு ரூபாவால் அதிகரித்திருக்கிறது. இந்த விலைஉயர்வு இடம்பெறப்போவதாக அடிக்கடி பயமுறுத்தல்கள் வந்துகொண்டிருந்தன.

ஆனால், அரசு நாட்டுமக்களுக்கு புத்தாண்டு பரிசாக அறிவித்திருப்பது எரிபொருள் விலை அதிகரிப்பைத்தான். இந்த விலை அதிகரிப்பால் அடுத்துவரும் நாட்களில் அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட ஏனைய பொருட்களின் விலைகள் உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தேர்தல்களின்போது விலைவாசியைக் குறைப்பதாக வாக்குறுதி கொடுத்துவிட்டு - பின்னர் ஒவ்வொரு பொருளாக விலை அதிகரிப்பு செய்வதுதான் அரசியல்வாதிகளின் வழக்கம்.

இப்போது மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கமும் அதையேதான் செய்திருக்கிறது. உள்ளூராட்சித் தேர்தலில் மக்கள் கொடுத்த வெற்றிக்கு பிரதி உபகாரமாக, புதுவருட பரிசாக இந்த எரிபொருள் விலை உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது.

அனைத்துவகை எரிபொருட்களின் விலைகளையும் ஒரேமட்டத்தில் அரசு அதிகரித்திருப்பதால் - இதனால் பாதிக்கப்படப்போவது அதிகம் சாதாரண மக்கள்தான். அவர்கள்தான் மண்ணெண்ணெய் பயன்படுத்துபவர்கள். அதைவிட டீசல், பெற்றோல் போன்றவற்றின் விலை உயர்வால் ஏற்படக்கூடிய தாக்கங்களுக்கும் இவர்கள் உட்படவே செய்வர்.

ஆனால், வசதிபடைத்தோரை இந்த விலை உயர்வு எந்தவகையிலும் பாதிக்கப்போவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. அதேவேளை, சாதாரண மக்களால் அதிகளவில் பயன்படுத்தப்படும் மண்ணெண்ணெய் விலையை மேலும் அதிகரிக்க அரசு திட்டமிட்டிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகின்றன.

எரிபொருள் விலைஉயர்வு என்பது உலகம் முழுவதுக்கும் பொதுவானதுதான். ஆனால், இந்த விலை உயர்வை சாதாரண மக்களை பாதிக்காத வகையில் நடைமுறைப்படுத்துவதுதான் அரசுக்கு உள்ள பொறுப்பாகும்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு அரசு மானியம் கொடுத்தே எரிபொருள் விலைஉயர்வை கட்டுப்படுத்தி வைத்திருந்தது. ஆனால், எப்படித்தான் விலை உயர்த்தினாலும், மானியம் கொடுத்தும்- பெற்றொலியக் கூட்டுத்தாபனம் இலாபக் கணக்குக் காட்டுகிறதா என்பது முக்கியமானது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எப்போதும் நட்டம் குறித்தே அழுது புலம்புகிறது. ஏன் இந்த நிலை? உலகெங்கும் உள்ள எரிபொருள் வர்த்தக நிறுவனங்கள் எல்லாமே இப்படித்தான் நட்டத்தில் இயங்குகின்றனவா? இல்லையே!

அப்படியானால், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிர்வாகத்திறனின்மைதான் நட்டப்படுவதற்கு காரணம் என்றே முடிவுக்கு வரவேண்டும்.

திருகோணமலையில் உள்ள எரிபொருள் குதங்களையும், குறிப்பிட்டளவு எரிபொருள் நிரப்பு நிலையங்களையும் இலங்கை அரசு - இந்திய நிறுவனம் ஒன்றுக்கு கொடுத்திருக்கிறது.

ஒரேவருடத்தில் பலநூறு மில்லியன் ரூபாவை குறிப்பிட்ட இந்திய நிறுவனம் இலாபமாகப் பெற்றிருக்கிறது. இப்படியிருக்கும் போது, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் மட்டும் ஏன் இலாபம் பெறமுடியவில்லை, தொடர்ந்து பலநூறு கோடி ரூபா நட்டம் ஏற்படுகிறது?


உலக சந்தை எரிபொருள் விலைஉயர்வு இத்தகைய நிறுவனங்களுக்கும் பொருத்தம்தானே. இலங்கை அரசு தனது நிறுவனங்களை இலாபகரமாக இயக்குவதற்க முதலில் வழிகாண வேண்டும். அதைவிட்டு, அரசு தனது நிர்வாகத் திறனின்மையால் - அரச நிறுவனங்களுக்கு ஏற்படும் நட்டங்களை சாதாரண பொதுமக்களின் கைகளால் கட்டிவரும் போக்குக்கு முடிவு கட்டப்படவேண்டும்.

அரசு இப்போது 8 ரூபாவால் எரிபொருள்களின் விலையை உயர்த்திய பின்னரும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் - ஈனஸ்வரத்தில் நட்டம் என்றுதான் முனகப் போகிறது. அதேவேளை, நாட்டு மக்கள் விலைவாசி உயர்வால் மேலும் பாதிப்புக்குள்ளாகப் போவதையும் தவிர்க்க முடியாது.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்

எரிபொருள் விலை 8 ரூபாவால் அதிகரிப்பு...




# இரண்டும் கெட்டான் நிலையில் இருப்பது ஈழத்தமிழருக்கும் இந்தியாவுக்கும் உதவாது

## பழ.நெடுமாறன் தெரிவிப்பு

(நேற்றைய தொடர்ச்சி..)

ஒரு காலத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கடற்படைத் தளமாக அது இருந்தது - அவர்கள் ஆண்ட காலத்தில். ஆனால், அதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இராஜேந்திர சோழனின் கடற்படைத் தளமாக திருகோணமலை இருந்தது.



நமக்குச் சொந்தமான அந்தத் துறைமுகத்தை ஆக்கிரமிப்பதற்கு அமெரிக்கா விரும்புகிறது. அன்று இந்தியாவின் எதிர்ப்பு இருந்ததால் - அமெரிக்க கடற்படைத் தளம் அங்கே வரவில்லை. சிங்கள அரசு என்ன நினைக்கிறது?

இந்தக் கடற்படைத் தளம் நமக்கு உதவாது - இது தமிழர் பகுதியில் இருக்கிறது. ஆகவே, இதை அமெரிக்காவுக்குத் தாரை வார்த்துக் கொடுத்து விட்டால் - அமெரிக்க ஏகாதிபத்தியம் அங்கே வந்து உட்காரும்.

அதன் பின்னர் தமிழரின் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதற்கு வசதியாக இருக்கும் என்று அதற்கான முயற்சியில் ஈடுபட்டார்கள்.

அன்று ஜெயவர்த்தனா அந்த நாட்டின் ஜனாதிபதியாக இருந்த போது திட்டமிட்டு திருகோணமலைப் பகுதியில் சிங்களவர்களை குடியேற்றினார்.

அவர்கள் எத்தகைய சிங்களவர்கள் தெரியுமா?

சிங்களச் சிறைகளிலே பெரிய கிரிமினல் குற்றங்களைச் செய்து நீண்டகாலம் சிறைவாசம் விதிக்கப்பட்டவர்களையெல்லாம் விடுதலை செய்து, அவர்களுக்கு நிலம் கொடுத்து நிதி கொடுத்து அங்கே குடியேறச் செய்தனர்.

அவர்களைக் கொண்டு ஊர்க்காவல்படை என்ற அமைப்பை ஏற்படுத்தி ஆயுதங்களையும் வழங்கினார்கள்.

அவர்களுக்கு வேலை என்ன? அங்கிருக்கக் கூடிய தமிழர்களை எல்லாம் தாக்கி அங்கிருந்து வெளியேற்றுவது, ஓட ஓட விரட்டுவது என்பதுதான்.

இந்த வேலைக்காக சிங்களக் குண்டர்கள் அங்கே குவிக்கப்பட்டார்கள். அதுமட்டுமல்ல நண்பர்களே-

திருகோணமலையில் மூன்றில் ஒரு பகுதியில் இன்று சிங்களவர்கள் குடியேறியிருக்கிறார்கள். திருகோணமலை முழுமையாக சிங்களவர்களின் கைகளில் சிக்கினாலும், அமெரிக்க கடற்படைத்தளம் அங்கு அமைந்தாலும் ஈழத் தமிழர்களுக்கு வருகிற அபாயத்தை விட - இந்தியாவுக்குப் பேரபாயம் என்பதை டெல்கியில் உட்கார்ந்திருப்பவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

யாருக்கோ நடக்கிறது, அங்கிருக்கிற ஈழத் தமிழர்களுக்குத் தானே இந்த சங்கடம் என்று எண்ணி டெல்கியில் இருப்பவர்கள் பேசாமலிருப்பார்களேயானால் - அது இந்தியாவுக்கே ஆபத்தாக முடியும் என்பதை நான் எச்சரிக்க விரும்புகிறேன்.

இந்திரா காந்தி பிரதமராக இருந்த போது 1982 ஆம் ஆண்டு நான் இலங்கைக்கு சுற்றுப்பயணம் செய்துவிட்டு வந்தேன்.

அதற்கு முந்தயஆண்டு யாழ்ப்பாணத்திலே மிகப் பெரிய நூலகத்தை சிங்கள இராணுவம் கொளுத்தியது. அது எனக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. மக்களைக் கொல்லலாம். ஆனால், எதற்காக நூல் நிலையத்தைத் திட்டமிட்டு கொளுத்தினார்கள்? அழித்தார்கள்? அதை அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக சட்டசபை உறுப்பினராக இருந்த நான் இங்கிருந்து இலங்கை க்குப் போனேன்.

எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அமிர்தலிங்கம் என்னை அழைத்துக் கொண்டு போய் எரிந்து போன நூல் நிலையத்தைச் சுற்றிக் காட்டினார்.

ஆசியாவின் மிகப்பெரிய நூல் நிலையமாக அது திகழ்ந்தது. மறைந்த அறிஞர் ஆனந்தகுமாரசாமி அருங்காட்சியகம் ஒன்றுக்கு அதிகாரியாகப் பணியாற்றியவர். அவர் உலகம் முழுமையும் சென்று சேகரித்த அரிய ஓலைச்சுவடிகள், நூல்களை அந்த நூலகத்துக்குக் கொடுத்திருந்தார்.

எட்டு இரும்புப் பீரோக்கள் நிறைய அவர் கொடுத்த ஓலைச் சுவடிகளும், நூல்களும் நிறைந்திருந்தன. நான் சென்று பார்த்த போது அவ்வளவும் பொசுங்கி சாம்பலாகிக் கிடந்தன. அவர்க ளுக்கு தமிழர்களை படுகொலை செய்வதை விட - தமிழ்ப் பண்பாட்டுச் சின்னங்களை அழிப்பதில் வெறிஇருந்தது. அதன் விளை வாக அந்த நூலகம் அடியோடு எரித்துச் சாம் பலாக்கப் பட்டது.

இதை ஏன் சொல்லுகிறேன் எனில்-

அதைப்பற்றி அறிந்துவந்து பிரதமர் இந்திரா காந்திக்கு ஒரு கடிதம் அனுப்பினேன். "திருகோணமலையை நான் சென்று பார்த்தபோது பெரிய பெரிய கட்டடங்கள் கட்டிக்கொண்டு இருக்கிறார்கள். எதற்காக என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், அமெரிக்கக் கடற்படை வீரர்கள் ஓய்வெடுப்பதற்காக கட்டடங்கள் கட்டப்படுவதாக அந்த மக்கள் சொல்லுகிறார்கள். அமெரிக்கா மெதுவாக அங்கே நுழைய முயற்சிக்கிறது. எச்சரிக்கையாக இருக்க வேண்டும்'' என்று அதிலே எழுதியிருந்தேன்.

அப்போது மதிப்புக்குரிய முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்களிடம் இதைப் பற்றிச் சொன்னேன். என்ன செய்யலாம் என்று என்னிடம் கேட்டார்.

இங்கிருந்து ஒரு அனைத்துக் கட்சி தூதுக்குழு டெல்கிக்குச் சென்று பிரதமர் இந்திரா காந்தியிடம் இதை வலியுறுத்திச் சொல்ல வேண்டும் என்று நான் சொன்ன போது அதை எம்.ஜி.ஆர் ஏற்றுக் கொண்டார். அதன் பின்னர் அவர் தலைமையிலேயே ஒரு தூதுக்குழுவாக டெல்கி சென்றோம். பிரதமர் இந்திரா காந்தியிடம் அனைத்து விபரங்களையும் தெரிவித்தோம்.

அதிகார பூர்வமாக அனைத்துக் கட்சித் தலைவர்களும் கையெழுத்திட்ட மனு ஒன்று அவரிடம் கொடுக்கப்பட்டது.

அதன் பின்னர் நாடாளுமன்றத்தில் பிரதமர் இந்திராகாந்தி அறிவிக்கிறார் -

இலங்கையின் எந்தப் பகுதியிலும், இந்துமா சமுத்திரத்தின் எந்தப் பகுதியிலும் - எந்த வல்லரசு முயற்சி செய்தாலும் அது இந்தியாவுக்கு விரோதமான செயலாக நாங்கள் எடுத்துக் கொள்வோம் என்று எச்சரித்தார்.

அதற்குப் பின்னால் அந்த முயற்சி நின்றது. ஆனால், மீண்டும் மீண்டும் முயற்சிக்கிறார்கள். அதற்கு சிங்கள அரசு ஒத்துழைக்கிறது.

நான் எம்முடைய பிரதமர் மன்மோகன்சிங் அவர்களை மிக்கபணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். திருகோணமலையில் ஏற்பட்டுள்ள இந்தக் கலவரம் - அதுவும் சமாதானப் பேச்சுவார்த்தை - சர்வதேச சமூகத்தின் உதவியோடு, வற்புறுத்தலின் பேரில் ஜெனிவாவில் பேச்சு நடத்திவிட்டு அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கு முன்னால் இப்படி ஒரு கலவரத்தை நடத்துவார்கள் என்று சொன்னால் -

ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட இருந்தவரை சுட்டுக் கொலை செய்வார்கள் என்று சொன்னால் -

சமாதானப் பேச்சுவார்த்தையை இந்தச் சூழலில் எப்படி நகர்த்த முடியும்? ஏதாவது ஒரு வேண்டாத சூழ்நிலையை ஏற்படுத்தி, விடுதலைப் புலிகள் இப்படித்தான் எப்போதும் சமாதானத்துக்கு வரமாட்டார்கள் என்று அவர்கள் மீது பழியைப் போட - திட்டமிட்ட இனப்படுகொலையைத் தொடர முயற்சிக்கிறார்கள்.

இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். இன்று தமிழ் நாட்டில் உள்ளஅனைத்துக் கட்சிகளும் இந்தப் பிரச்சினை யிலே ஒன்றுபட்டு குரல் கொடுக்க வேண்டும்.

அப்படிக் குரல் கொடுத்தால் இந்திய அரசு இந்தப் பிரச்சினையிலே எந்தளவு கவனம் செலுத்த வேண்டுமோ அந்த அளவுக்கு கவனம் செலுத்தும் என்ற நம்பிக்கை உள்ளது.

இந்திய அரசு இந்தப் பிரச்சினையிலே இரண்டும் கெட்டான் நிலையில் இருக்கிறது. அது ஈழத்தமிழர்களுக்கும் உதவாது,இந்தியாவுக்கும் உதவாது.

(தொடரும்....)

சிங்கள அரசியல்வாதிகள், கருத்தியலாளர்கள், பத்திஎழுத்தாளர்கள் எனப்பலரும் தற்போது "உலகின் அரசியல் இராணுவச் சூழலும் புலிகளுக்கு எதிரானதாகவே காணப்படுகிறது. எனவே, அவர்கள் (புலிகள்) கட்டுப்படுத்தப்பட வேண்டும்" என பரவலாக எழுதியும், பேசியும் வருகிறார்கள்.

அண்மைக் காலங்களில் எந்தவொரு கிழமையிலும் சிங்கள, ஆங்கில செய்தித் தாள்களைப் புரட்டிப் பார்த்தால் புலிகள் மீது அரசு கடும் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும் எனவும், கருணா குழுவின் செயற்பாடுகளால் புலிகள் பலவீனப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் எனவும், எந்த போரியல் நகர்வையும் மேற்கொள்ள முடியாத படி புலிகள் சர்வதேச ரீதியாக முடக்கப்பட்டுள்ளார்கள் என்பன போன்ற பல கருத்துக்கள் மாறிமாறி வெவ்வேறு வடிவங்களில், வெவ்வேறு ஆதாரங்களுடன் கட்டுரைகளாகவும், ஆய்வுகளாகவும், ஆசிரியர் தலையங்கங்களா கவும் வெளிவந்த வண்ணமிருப்பதைக் காண லாம்.

இவற்றிலிருந்து மிகத் தெளிவாக ஒன்றை நாம்

ஆணைக்குழுவிலிருந்து மங்கள முனசிங்க நாடாளுமன்றத் தெரிவுக் குழுவரை நடந்த பம்மாத்துகளை அறிந்தவர்கள், சமாதானத்துக்கும், நல்லிணக்கத்துக்குமான தேசிய ஆலோசனைச் சபை எதற்காக இலங்கை ஜனாதிபதியால் நிறுவப்பட்டப்போகின்றது

**பத்திரிகையாளர் டி.சிவராம் நயவஞ்சகமாகக் கடத்திப் படுகொலை செய்யப்படுவதற்கு முன்னர் எழுதிய கட்டுரை இது. இவரது கொலையில் படைத்தரப்புப் புலனாய்வுப் பிரிவினருக்கும் பங்கிருப்பதாகக் கருதப்பட்டது. இந்தக் கட்டுரையும், இதற்குச் சான்றுபகரும். சிவராம் எழுதிய இந்தக் கட்டுரை இன்றைய நிலையிலும் பொருத்தமாக அமைகிறது.**

என்பதை மீ[illegible]த் தெளிவாகப் புரிந்து கொள்வார்கள். தமிழருக்கு நியாயமான அரசியல் தீர்வை வழங்கியே ஆகவேண்டும் என்ற சர்வதேச அழுத்தங்கள் இல்லாமல் போய் விட்ட நிலையில், சிங்கள தேசம் எம்மை மீண்

அனைத்துத் தளபதிகளும் தமது அனுபவங்களையும், தாம் கற்ற பாடங்களையும், நூல்களாகவும், ஆய்வுரைகளாகவும், கட்டுரைகளாகவும் வெளியிட்டுள்ளனர். இவை எல்லாவற்றிலும் அவர்கள் ஒன்றை முக்கியமாகக் குறிப்பிட்டுள்ளனர்.

அதாவது தமிழ் மக்களுக்கு முறையான சுயாட்சி கொடுக்கப்படாமையால், அவர்களை புலிகளிடமிருந்து அந்நியப்படுத்துமளவுக்கு திருப்திப்படுத்த முடியவில்லை. இதனால் எதிர்கெரில்லா போரியலின்(Counter Insurgency) அடித்தளமான மக்களை வென்றெடுக்கும் மூலோபாயம் முழுமையாக வெற்றி பெறவில்லை எனவும், இதன் காரணமாக மக்கள் ஆதரவுடன் புலிகள் தொடர்ந்து இந்தியப் படைகளுக்கெதிராக போராடக் கூடியதாக இருந்தது எனவும் அவர்கள் கூறுகின்றனர். மக்களைத் திருப்திப்படுத்தாமலும், அந்த மக்களுக்குள்ளிருந்து உள்ளூர் படைகளை உருவாக்காமலும் ஓர் எதிர் கெரில்லாப் போரை வெற்றிகரமாகக் கொண்டு நடத்த முடியாது என்பது அனைத்துப் போரியல் அறிஞர்களதும் ஒருமித்த கருத்தாகும்.

இதனாலேயே ஈராக்கிலும், ஆப்கானிஸ்தா

# இராணுவத் தீர்வின் மீது ஆசைகொள்ளும் சிங்களதேசம்

கண்டு கொள்ளலாம். அதாவது இலங்கையின் இனமுரண்பாட்டை தீர்ப்பதற்கு அரசியல் தீர்வைத் தவிர்ந்த ஏனைய வழிமுறைகளிலேயே சிங்கள தேசம் கூடிய நாட்டமும், பற்றும் காட்டி வருகின்றது என்பதே அந்த உண்மையாகும். நாட்கள் செல்லச் செல்ல அரசியல் தீர்வு தவிர்ந்த ஏனைய வழிமுறைகளின் மூலம் புலிகளை நிரந்தரமாக முடக்கிப்போட்டு, காலப் போக்கில் அவர்களை வலுவிழக்கச் செய்யலாம் என்ற எண்ணம் சிங்கள தேசத்தில் மிக மேலோங்கி வருகிறது.

நியாயமான அரசியல் தீர்வொன்றை தமிழ் மக்களுக்கு வழங்கி, அதன் மூலம் இலங்கையின் ஒட்டுமொத்த சமூகத்தையும் பீடித்து அழித்து வருகின்ற இனப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவருவதைவிட கருணாவுக்கு ஆதரவு வழங்கி, அதன் மூலம் புலிகளைப் பலவீனப்படுத்த வேண்டும் என்பதில் சிங்கள தேசம் பேரார்வம் காட்டி வருவதையே நீங்கள் காண்கிறீர்கள்.

இன்று அரச தரப்பிலும் சரி, சிங்கள எதிர்க் கட்சிகளைப் பொறுத்தவரையிலும் சரி, பேச்சு வார்த்தையில் சாக்குப்போக்குக்காகவே நாட்டங் காட்டப்படுகின்றது என்பது வெள்ளிடை மலை. தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வொன்றைக் கொடுக்காமல் காலவரையறை யின்றி தாம் இழுத்தடித்துக் கொண்டுபோனா லும், தம்மீது வெளிநாடுகள் எந்த அழுத்தத்தையும் கொடுக்கமாட்டா என சிங்கள மேலாண்மையாளர் இன்று திடமாக நம்புகின்றனர்.

இந்த நிலையில் சிங்கள தேசத்தை நியா யமான அரசியல் தீர்வை நோக்கி நகர வைத்திட நாம் கொடுக்கக்கூடிய அழுத்தம் என்ன என்ற கேள்வி தவிர்க்கமுடியாதபடி எழுகிறது. பிரித்தானியர் இலங்கைத் தீவை விட்டகன்று 35 வருடங்கள் வரை (1948 - 1983) அகிம்சை வழியில் நாம் எத்தனையோ அழுத்தங் கொடுப்பதற்குப் பதிலாக சிங்கள அரசுகளோடு கூடிக் குலாவியும் பார்த்தனர். கண்டபயன் ஒன்று மில்லை.

மீண்டும் போரில் இறங்குவதற்கு புலிகளை சர்வதேச சமூகம் அனுமதிக்காது என்ற திட மான நம்பிக்கை ஒருபுறமும், அரசியல் தீர்வை கொடுப்பதற்கு தம்மீது டோக்கியோ பிரகட னத்தின் மூலம் போடப்பட்ட அழுத்தத்தை அமெரிக்கா நீக்கிவிட்டது என்ற உற்சாகம் மறு புறமுமாக சிங்கள தேசத்தைத் மீண்டும் படிப்படியாக இராணுவத் தீர்வு என்ற பாதையை நோக்கி துரிதமாக தள்ளிவருகின்றன.

சர்வகட்சி ஆலோசனைக் குழுவொன்றையும், பேச்சுக்கான நாடாளுமன்ற தெரிவுக் குழுவொன்றையும் அமைத்து மீண்டும் புலிகளுடன் பேசப் போகிறேன் என இலங்கை ஜனாதிபத[illegible]றியிருப்பது சுத்த அபத்தமானது. அர[illegible]கள் சிக்கலான ஒரு விடயத்தை நைசாக குப்பைத் தொட்டியில் போடுவதற்கு காலங் கால[illegible]மாக [illegible]ன்படுத்தி வரும் முறைதான் ஆ[illegible]ணைக்குழு, சர்வகட்சி குழு, தெரிவுக்குழு போ[illegible]ன்றவற்றை அமைத்தலாகும். சன்சோனி

டும் போருக்கு இழுத்து, வெளிநாட்டு இராணுவத் தலையீட்டை இங்கு ஏற்படுத்தி எமது உரிமைகளையும் அந்த உரிமைகளைக் கேட்டுப் போராடுவதற்குத் தேவையான எமது படைவலுவையும் ஒரேயடியாக நசுக்கிவிடுவதற்கும் தருணம் பார்த்திருக்கிறது.

அரசியல் தீர்வை இழுத்தடித்துக் கொண்டு தமிழர் தரப்பை பல்வேறு வழிகளில் சீண்டி வந்தால் புலிகள் தாமாகவே போரை தொடங்க வேண்டி நிர்ப்பந்திக்கப்படுவர். இப்படியான நிர்ப்பந்தத்துக்கு அவர்கள் ஆளாகும்போது, நேரடி வெளிநாட்டுப் படையுதவி கிடைப்பதற்கு முயற்சிசெய்து அந்த முயற்சியில் வெற்றியும் காணலாம் எனசிங்கள மேலாண்மையாளர் இன்று நம்பத் தலைப்பட்டுள்ளனர். சிங்கள தேசத்தின்மீது எமக்கு ஓர் அரசியல் தீர்வை தருவதற்கான சர்வதேச அரசியல் அழுத்தங்கள் அற்றுப்போன நிலையில்- மீண்டும் நாமே அந்த அழுத்தத்தை ஏற்படுத்த



வேண்டிய கட்டாயம் விரைவில் தோன்றும். இது தவிர்க்க முடியாதது. ஆகவேதான் நாம் வெளிநாட்டு இராணுவத் தலையீட்டின் சாத்தியப்பாடுகளையும், அதை முன்தடுக்கும் வழிவகைகளையும் ஆராய வேண்டியுள்ளது.

இதில் முதலாவதாக நாம் இந்தியாவைப் பார்ப்போம். யாழ்ப்பாணம் 2000ஆம் ஆண்டு புலிகளால் கைப்பற்றப்படவிருந்த வேளையில், இந்தியா தமது உதவிக்கு வரவில்லை என்ற ஆதங்கமும், அதன் காரணமாக வருங்காலத்திலும் இந்தியா புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கு நேரடியாக உதவாமல் விடலாம் என்ற சந்தேகமும், சிங்கள மேலாண்மையாளரிடம் உண்டு. ஆயினும் நாம் இந்திய இராணுவத் தலையீடு இனி இருக்காது என்று வாளாவிருப்பதை விட அதன் சாத்தியப்பாட்டை ஆராய்வது அவசியமாகும்.

1987 ஆம் ஆண்டில் இந்தியா தனது படையை இங்கு அனுப்பிய போது பின்வரும் விடயங்கள் தனக்கு சாதகமாக இருக்கின்றனவா என்பதை கருத்திற்கொண்டே அதைச் செய்தது. முதலாவது - தமிழ் மக்கள் ஓரளவாயினும் திருப்திப்படக்கூடிய சுயாட்சி. இரண்டாவது - பெரும்பான்மையான தமிழ் இயக்கங்கள், அரசியல் கட்சிகள் என்பவற்றின் ஆதரவு. மூன்றாவது - தமிழர் தாயகத்தில் புலனாய்வு ஆதிக்கம்.

இந்தியப்படைகளை இங்கு வழிநடத்திய

னிலும் பொம்மை அரசுகளை ஏற்படுத்தி அவற்றின் மூலம் உள்ளூர்ப் படைகளை உருவாக்கி அவற்றின் துணையோடு அவ்விரு நாடுகளிலும் தனக்கெதிராக நடைபெறும் கெரில்லாப் போரை முறியடிக்க அமெரிக்கா முயல்வதை நாம் காண்கின்றோம். இதேபோல் பல உதாரணங்களை நாம் கா[illegible]டலாம். ராஜீவ் காந்தி கொலை விசாரணையைப் பற்றி அந்த விசாரணையை நடத்திய தலைமை அதிகாரி கார்த்திகேயன் ஒரு நூல் எழுதியுள்ளார். அதன் பின்னுரையாக ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுகிறார்.

1989ஆம் ஆண்டு இந்திய அமைச்சரவையின் தலைமைச் செயலாளர் தன்னைத் திடீரென அழைத்து இலங்கை சென்று, அங்கு இந்தியப் படைகள் புலிகளுக்கு எதிரான போரில் ஏன் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்றன என்பதையும் அதோடு தொடர்புபட்ட வேறு விடயங்களையும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு இங்கு அனுப்பி வைத்ததாகவும் கூறுகிறார். தான் வட- கிழக்குக்குச் சென்று சாதாரண இந்தியப் படைவீரர்கள் தொடக்கம் கட்டளைத் தளபதிகள் வரை நூற்றுக்கணக்கானவர்களுடன் பேசியதிலிருந்தும் ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.என்.டி எல்.எப், ரெலோ, கூட்டணி, தமிழ்ப் பொது மக்கள் போன்றோரிடமிருந்து அறிந்து கொண் டவற்றிலிருந்தும் மிகத் தெளிவாக ஒன்றைப் புரிந்து கொண்டதாகக் கார்த்திகேயன் கூறுகிறார். அதாவது தமிழருக்குக் கொடுக்கப்பட்ட சுயாட்சி அரைகுறையாக இருந்ததெனவும், அதைக் கூட சிங்களப் பேரினவாத அரச அதிகா ரிகள் பல்வேறு வழிகளில் கொடுக்க விடாமல் தடு த்து வந்தனரெனவும் கூறுகிறார்.

இதன் காரணமாக வட- கிழக்கு மாகாண சபையாலும், அதைக் கொண்டு நடத்திய இயக்கங்களாலும் புலிகளுக்கு மாற்றீடான ஒரு பாதையை தமிழ் மக்களுக்குக் காட்ட முடியாதுள்ளது எனவும், இதனால் புலிகளின் அரசியல் செல்வாக்கு வீழ்ச்சி யடையாமல் இருந்தது எனவும் எழுதுகிறார். இந்தியப் படைகளால் அவர்களை ஓரங்கட்டமுடியாமல் இருப்பதற்கும், போர் முடிவின்றி இழுபட்டு வருவதற்கும் இதுவே அடிப்படைக் காரணம் என்று இந்திய அரசுக்குத் தான் சமர்ப்பித்த அறிக்கையில் ஆணித்தரமாக எடுத்துரைத்ததாக கார்த்திகேயன தனது நூலில் கூறுகிறார்.

இந்த வகையில் இந்தியா மீண்டும் தனது படைகளை புலிகளுக்கு எதிராக வருங்காலத்தில் அனுப்புவதாயின் அதற்குத் தேவையான மேற்படி முக்கியமான அடிப்படை இன்று அறவே இல்லை. அடுத்தது சிங்களப் பேரினவாதிகளின் சார்பில் புலிகளுக்கு எதிராக தனது படைகளை அனுப்பி இந்தியா இங்கு சாதிக்கப் போவதென்ன? ஒன்றுமில்லை. இலங்கையில் தனக்கு எது தேவையோ அதை 1987ஆம் ஆண்டு கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தின் ஊடாக இந்தியா பெற்றுக்கொண்டது.

(தொடரும்...)

## விய புது வருடம் உங்களுக்கு எப்படி?

## கன்னி



**உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2 கால்கள்**

கன்னிராசியில் பிறந்தவர்களுக்கு 2ஆம் வீட்டில் குரு சஞ்சாரம் செய்வதும், 11 ஆம் வீட்டில் சனி சஞ்சாரம் செய்வதும் சிறப்பான அம்சமாகும். புதுவருஷம் குதூகலத்துடனேயே பிறக்கின்றது. குடும்பத்தில் மங்களகரமான இனிய சம்பவங்கள் நடைபெறும். நீண்ட காலமாகத் தடைப்பட்டிருந்த கருமங்கள் இலகுவில் நிறைவேறும். எடுத்த கருமங்கள் தங்கு தடையின்றி இலகுவில் கைகூடும். திட்டமிட்டு எந்தக் கருமத்தையும் சிறப்பாகச் செய்யக் கூடியதாக இருக்கும். சிலருக்கு புதுவீடு வாங்க, விற்க அனுகூலம் கிட்டும். எதிர்பாராத பண வருவாய் வந்து சேரும். வெளிநாட்டுப் பிரயாணங்களை எதிர்நோக்கியிருப்போருக்கு கருமம் கை கூடும். உடல் நிலையும், பலமும் வலிமையும் பொருந்தியதாக அமையும். எதிரிகளின் பலம் குறைந்துவிடும். முடிக்க முடியாமல் இழுபறியிலிருந்த பிரச்சினைகள் இந்தக் காலம் முடித்துவிடும். குடும்பத்தில் மனைவி, பிள்ளைகள் சுபீட்சத்துடன் காணப்படுவர். பெரிய மனிதர்களின் ஆதரவும் நட்பும் கிடைத்துக் கொண்டிருக்கும். அரசாங்க வழியிலும் அனுகூலம் கிட்டும்.

12-10-2006 இல் ஜன்மத்தில் கேது 7 இல், ராகு சஞ்சரிப்பதால் குடும்ப வாழ்க்கையில் ஒற்றுமை குறையும். குடும்பத்தில் மனைவி, குழந்தைகளுக்கு சுகக்குறைவுகள் காட்டும். உறவினர்களுக்கிடையேயும் சற்று விரிசல் காணும்.

28-10-2006இல் தன ஸ்தானத்தில் சஞ்சரித்த குருபகவான் 3 ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் சற்றுச் சோதனைக் காலமாகும். எத்தகைய சோதனை வந்தாலும் அவற்றை இலகுவில் சமாளிக்கக்கூடிய வலிமையும், மனஉறு தியும் கிட்டும். சிறு சுகக்குறைவுகளும் ஏற்பட லாம். குடும்ப அங்கத்தவர்களையும் உறவினர்களையும் அனுசரித்துப் போனால் எல்லாம் வெற்றிகரமாக அமையும்.

உத்தியோகத்தர்களுக்குத் தடைப் பட்டிருந்த பதவி, ஊதிய உயர்வுகள் இந்த வருடம் கிடைக்கும். கௌரவமான பதவிகள் தேடிவரும். வசதியான இடமாற்றங்கள் ஏற்படலாம். படித்து விட்டுத் தொழிலை எதிர்பார்த்திருந்தவர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிட்டும். சிலருக்கு பதவி நிரந்தரமாக்கப்படும். மேலதிகா ரிகளின் பாராட்டுக்களும், சக ஊழியர்களின் உதவியும் கிடைக்கும். அரசாங்க வழியில் அனுகூலம் உண்டாகும். வெளியூர் செல்லும் யோகமும் அமையும். பொதுமக்களின் கௌரவமும் கிட்டும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் அபிவிருத்தியும், அதிகலாபமும் பெற முடியும். தொழிலைப் பெருக்கிக் கொள்வதற்கு சிறப்பான காலம். பெரிய முதலீடுகளையும் செய்யலாம். கூட்டுத் தொழில்களிலும் சிறப்பும், முன்னேற்றமும் காணலாம். ஏஜென்ஸி வேலைகள், ஏற்றுமதி, இறக்குமதி செய்வோர் கூடிய லாபங்களைப் பெறுவர். வங்கி நிலை சிறப்பாக இருக்கும் எடுக்கும் கருமங்கள் வெற்றியாகவே அமையும். கூட்டுத் தொழில் என்பவற்றிலும் மேன்மை உண்டாம்.

பெண்களுக்கு மனத்தில் மகிழ்ச்சி உண்டாகும். தேகநிலை வலிமை நன்றாக இருக்கும். குடும்பத்தில் கணவன் - மனைவியிடையே சிறு வாக்குவாதங்கள் தோன்றினாலும், ஒருவரையொருவர் அனுசரித்துப்போனால் தாக்கங்கள் இராது. தடைப்பட்டிருந்த திருமணங்கள் சிறப் பாக நடைபெறும். பொன், பொருள், ஆடை சேர்க்கைகள் கிட்டும். புத்திரபாக்கியமும் உண்டாகும்.


மாணவர்களுக்கு கல்வி, விளையாட்டுக்களில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்தி பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெறமுடியும். பெற்றோர், ஆசிரியர்களின் உதவியும், ஆதரவும் கிடைக்கும். சக மாணவர்களுடன் நட்புகள் ஏற்படும். இந்த வருடம் கல்வியில் முன்னேற்றம் பெற்றுத் திகழ இடமுண்டு.

(தொடரும்...)

சி.சிதம்பரநாதக் குருக்கள்

# கண்ணீர் அஞ்சலி

## தாயக விடுதலைப் பற்றாளரும், தமிழீழத்தின் மூத்த படைப்பாளருமான கவிஞர் நாவண்ணன் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்



### நாட்டுப்பற்றாளர்

# கவிஞர் நாவண்ணன் அவர்கள்

### (மன்னார்)

குறிப்பு:-

சுகவீனம் காரணமாக 15.04.2006 அன்று சாவடைந்த கவிஞர் நாவண்ணன் அவர்களது புகழுடல் 17.04.2006 இன்று நண்பகல் 1 மணிவரை நிதர்சனம் மண்டபத்தில் வணக்கத்துக்காக வைக்கப்பட்டு பின்னர் 1.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரையும் புலிகளின் குரல் வானொலி நிறுவனத்தில் வைக்கப்பட்டு அதன் பின் இவருடைய சொந்த ஊரான மன்னாருக்கு எடுத்துச் செல்லப்படும்.

பொறுப்பாளர்,
போராளிகள்,
பணியாளர்கள்,
நிதர்சனம்,
தமிழீழம்.

(சி.5262)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பஸ் நேரக்கணிப்பாளர் மீது வவுனியாவில் துப்பாக்கிச் சூடு



வவுனியா —

வவுனியாவில் அடையாளம் தெரியாத நபர்கள் நேற்றுக்காலை நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பஸ் நேரக்காப்பாளரான ஜே.டபிள்யூ.தனசிறி என்பவர் படுகாயமடைந்தார்.

வவுனியாவில் நே[illegible]முன்தினம் நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலையொட்டி பெருமளவில் படையினர் குவிக்கப்பட்டிருந்த நிலையில் - வவுனியாவின் மத்திய நகர்ப்பகுதியில் நேற்று இந்தத் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது.

இராணுவ புலனாய்வுத் துறையினருடனும், துணை ஆயுதக் குழுக்களுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த தனசிறி, சிங்களவரான அவர் தமிழில் நன்கு பேசக்கூடியவர் என்றும் வவுனியா செய்திகள் தெரிவித்தன.

படுகாயமடைந்த நிலையில் அவர் அனுராதபுரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# அச்சுவேலி தெற்கில் படையினர் சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம் —

அச்சுவேலி தெற்குப் பகுதியில் படையினர் நேற்று திடீரென சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நேற்று அதிகாலை வேளையில் அதிகளவு படையினர் குவிக்கப்பட்டு, ஒவ்வொரு வீடு வீடாக தேடுதல் நடத்தினர். இதன்போது வீடுகளில் இருந்த பொருட்களை தீவிர சோதனைக்குட்படுத்தினர்.

இந்தத் தேடுதல் நடவடிக்கையில் - தோட்டங்களில் படையினர் காலணியுடன் சென்றதால், பயிர்கள் சேதமடைந்துள்ளதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

படையினர் இந்தப் பகுதியில் நீண்டநேரமாக தேடுதல் நடத்திய போதும் - சந்தேகத்துக்கு இடமான பொருட்கள் எதையும் கைப்பற்றவில்லை. அதேவேளை எவரும் கைது செய்யப்படவில்லையெனவும் தெரியவருகிறது.

கடந்த சில நாட்களாக குடாநாட்டில் பல்வேறு பகுதிகளிலும் படையினரின் தேடுதல், சுற்றிவளைப்பு, வீதிச் சோதனை என்பன அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# கப்பல்துறை தாக்குதலில் 3 விமானப்படையினரும் பலி!

கொழும்பு —

திருகோணமலை - கப்பல்துறையில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் மூன்று விமானப்படையினர் பலியானதாக விமானப்படை பேச்சாளர் குறூப் கப்டன் அஜந்த பெரேரா தெரிவித்தார்.

திருமலை நகரிலிருந்து 10 கிலோ மீற்றர் கிழக்குப் பகுதியில் கப்பல்துறை என்ற இடத்தில் விமானப்படையினர் சென்ற டிபென்டர் ஜீப் சனிக்கிழமை இரவு 7.30 மணியளவில் சக்தி வாய்ந்த கிளைமோரில் சிக்கியது.

இதில் இரண்டு படையினர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். ஒருவர் படுகாயமடைந்தார். பின்னர் அவரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சார்ஜன்ட் ஜயந்த, எயர் கிராப்ட்ஸ்மேன் ஜயந்த மற்றும் லிடிங் எயர் கிராப்ட்ஸ்மேன் ஜயசேகர ஆகியோரே இந்தச் சம்பவத்தில் பலியானதாக இராணுவத்தரப்பு தெரிவித்தது. இதே வேளை - இந்தச்சம்பவத்தில் இரு படையினர் பலியானதாக செய்திகள் வெளியாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# நயினாதீவு கடற்பகுதியில் மீட்கப்பட்ட எலும்புக்கூடு!

ஊர்காவற்றுறை —

நயினாதீவு - கடற்பகுதியில் இருந்து மீட்கப்பட்டதாகத் தெரிவித்து உருக்குலைந்த நிலையில் மனித எலும்புக்கூடு ஒன்று ஊர்காவற்றுறை பொலிஸாரால் நேற்றுப் பிற்பகல் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

நயினாதீவு - கதிப்குடா கடற்பகுதியிலிருந்து மீட்கப்பட்ட எலும்புக்கூடே யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சட்ட வைத்திய அதிகாரி பிரேத பரிசோதனை மேற்கொள்வதற்காக - ஊர்காவற்றுறை மாவட்ட நீதிவானின் உத்தரவின் பேரிலேயே இந்த எலும்புக்கூடு யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## தாக்குதல்கள்...

படுகொலை செய்யப்பட்ட இந்த வேளையில் - நாம் புலிகளுக்கும் அரசுக்குமான ஜெனிவா போர்நிறுத்த உடன்பாட்டினை நடைமுறைப்படுத்துவதற்காக புலிகளின் சார்பாக எமது தாக்குதல்களை நிறுத்திக்கொண்டோம். ஆனால், அரசு இதை மதித்ததாக இல்லை. இதற்கு மாறாக மீண்டும் தமிழ்மக்களை படுகொலை செய்ய ஆரம்பித்துள்ளது.

எனவேதான் அடுத்தக்கட்டத் தாக்குதலை நேற்றுமுன்தினம் வவுனியா உயர்பாதுகாப்புப் பிரதேசமெனப்படும் ஜோசப் இராணுவ முகாமுக்கு அருகில் கிளைமோர்த் தாக்குதலை வெற்றிகரமாக நடத்தியிருந்தோம்.

இதில் ஏழு படையினர் கொல்லப்பட்டு மேலும் 10 படைச்சிப்பாய்கள் படுகாயமடைந்தனர். இப்படியான தாக்குதல்கள் எதிரி எமது மண்ணை விட்டு விலகும்வரை நடத்தப்படும் என்பது உறுதி.

நாம் இந்தத் தாக்குதல்கள் செய்யத்தொடங்கியதை விடுதலைப் புலிகள் மன்னித்துக் கொள்ள வேண்டும். அப்பாவி மக்களைக் காப்பாற்ற இதுவே எமது வழி.

இதில் நடைபெறும் பேச்சுவார்த்தையைக் கூட மதிக்கும் அரசு மதிப்பதாக இல்லை. எனவே, இனிவரும் காலத்தில் மிகவும் கடுமையான அழிவுகளை முப்படையினருக்கும் ஒட்டுக்குழுக்களுக்கும் ஏற்படுத்தி இவர்களை எமது மண்ணிலிருந்து அப்புறப்படுத்துவோம் ஓயமாட்டோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பேச்சில் பங்கேற்கமுடி...

15.04.2006 அன்று நடைபெற்ற துரதிஸ்டவசமான சம்பவங்கள் பற்றியும், அதன் தொடராக இன்று ஏற்பட்டுள்ள நிலைமைகளை விளக்குவதற்காகவும் இந்தக் கடிதத்தை எழுதுகின்றேன்.

எமது கிழக்குப் பிராந்தியத் தளபதிகளின் பயண ஒழுங்கை வழமை போன்று ஏற்படுத்தித் தரும்படி உங்களிடமும், கண்காணிப்புக்குழுவிடமும் கோரியிருந்தோம். முதற்கட்ட ஜெனிவா பேச்சு முடிவடைந்து வந்து ஒரு குறுகிய காலப் பகுதியிலேயே உங்களிடம் இந்தக் கோரிக்கையை நாம் முன்வைத்திருந்தோம்.

எமது தளபதிகளுடைய பயண ஒழுங்கிற்கு திகதிகள் தீர்மானிக்கப்பட்ட நிலையில் அரசு வான்வழிப் போக்குவரத்தை நிராகரித்துள்ளதெனக் கண்காணிப்புக் குழு எமக்கு அறிவித்திருந்தது. ஏற்கனவே நடைமுறையிலிருந்த வழிகளை இலங்கை அரசாங்கம் நிராகரித்தது எமது தலைமைப்பீடத்திற்கு அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் தந்தது.

இந்தநிலையில் அடுத்தகட்ட ஜெனிவா பேச்சுக்கான தீர்மானங்கள் எடுக்கவேண்டிய அவசரம் கருதியும், இதற்காக எமது தளபதிகளின் பயணம் நடைபெறவேண் டியிருந்த அவசியம் கருதியும், ஏற்கனவே நடைமுறையிலிருந்த கடல் வழிப் பயண ஒழுங்கு பற்றி கண்காணிப்புக்குழுவிற்கு நாம் பரிந்துரைத்தோம். இந்த நடை முறைக்கும் தனது தடையைக் கண்காணிப்புக்குழுவின் [illegible]ாக அறிவித்ததோடு, எமது தளபதிகள் - இலங்கை கடற்படையால் ஒழுங்குபடுத்தப்படும் படகிலேயே செல்லலாம் என்றும் இலங்கை அரசு நிர்ப்பந்தித்தது.

இலங்கை அரசாங்கம் அனைத்துக் கட்சி மாநாடுகளை ஜெனிவா பேச்சுவார்த்தைக்கு முன் நடத்திய அதேநேரத்தில், எமது மத்தியகுழு கூடுவதற்குக்கூட பல தடைகளை விதித்துள்ளது. இவற்றினுள் முதன்மையாக, எமது தளபதிகளது பயணங்களையும், செயற்பாடுகளையும் இலங்கை அரசாங்கமானது முடக்கியுள்ளதுடன் போர்நிறுத்த ஒப்பந்தத்தையும் மதித்துச் செயற்படவில்லை.

இந்தச் சூழ்நிலையானது, எமது விடுதலை இயக்கம் குழப்பங்கள் நிறைந்த சூழமைவை உருவாக்க வல்ல பல வரையறைகளுக்குள் செயற்படுவதற்கு நிர்ப்பந்தித்துள்ளது. இலங்கை அரசின் இந்தச் செயற்பாட்டை ஜெனிவா பேச்சுக்கு விடுதலைப் புலிகளைச் செல்லவிடாது தடுக்கும் ஒரு நிலைப்பாடாகவே நாம் விளங்கிக்கொள்கின்றோம்.

இக்கட்டத்திலேயே கண்காணிப்புக்குழுத் தலைவர் எம்மைச் சந்தித்து, தான் ஒரு மாற்று யோசனையை முன்வைப்பதாகவும், அதனை இந்தத் தடவை தற்காலிகமாக ஏற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார். அவர் தான் ஒரு தனியார் படகை ஒழுங்குபடுத்துவதாகவும், அதில் அவர் உட்பட கண்காணிப்புக்குழுவினரும், எமது தளபதிகளோடு பிரயாணிப்பதாகவும், இலங்கை கடற்படையின் சம்பந்தமோ தலையீடோ இருக்காதெனவும் உறுதியளித்தார்.

ஜெனிவா பேச்சுக்களின் முக்கியத்துவம் கருதி இதனை ஒரு தற்காலிக ஏற்பாடாக எமது தலைமைப்பீடம் ஏற்றுக்கொண்டது. கண்காணிப்புக்குழுத் தலைவரின் வாக்குறுதிகளை முழுமையாக நம்பியே எமது தளபதிகளின் பயண ஒழுங்கை மேற்கொண்டோம். துரதிஸ்டவசமாக எமது தளபதிகளின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் விதமாக கடற்படையினர் நடந்துகொண்டமையாலும், கண்காணிப்புக்குழுத் தலைவரின் வாக்குறுதிகளுக்கு எதிர்மறையாக சம்பவங்கள் நடைபெற்றமையாலும் எமது தலைமைப்பீடத்தின் மத்தியகுழுக் கூட்டம் நடைபெற முடியாமற் போய்விட்டது. இக்கூட்டத்தில் எமது கிழக்குத் தளபதிகளைச் சந்தித்து உறுதியான முடிவுகள் எடுக்காமல் நாம் ஜெனிவா பேச்சுவார்த்தைகளில் பங்குகொள்ள முடியாதென்பதை உங்களுக்கு முன்பே விளக்கியிருந்தோம்.

இலங்கை அரசு எமது தளபதிகளின் பயணத்தைக் குழப்பியதை நாம் கண்டிப்பதோடு, இந்நிலைக்கு எமது வருத்தத்தையும் தெரிவிக்கிறோம். எமது வான்வழிப் பயணத்தையும் நிராகரித்து, கண்காணிப்புக்குழு ஒழுங்கமைத்த கடற்பயணத்தையும் குழப்பியதால் நாம் ஜெனிவாவிற்கு வரமுடியாத ஒரு இக்கட்டான நிலையில் உள்ளோம் என்பதையிட்டு நாம் மிகவும் கவலை கொள்கிறோம்.

அதனால், எம்முன் போடப்பட்டிருக்கும் ஜெனிவா பேச்சிற்கு வருவதற்கான தடைகள் நீக்கப்பட்டு, சுமுகமான சுழல் உருவாகும் வரை எம்முடைய பேச்சுக்குழு ஜெனிவா பேச்சிற்கு வரமுடியாதென்பதை கவலையுடன் அறியத் தருகிறோம்.

எதிர்கால முன்னெடுப்பிற்கு போர்நிறுத்த உடன்பாட்டை நடைமுறைப்படுத்தவும், குறிப்பாக ஜெனிவா பேச்சுக்களில் உடன்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்தவும் இதுவரை காலமும் பேணப்பட்டுவந்த நடைமுறைகளை மாற்றியமைக்க அனுமதிக்காமலும் இலங்கை அரசை வலியுறுத்தி வழிக்குக் கொண்டுவருவது அவசியமானது என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள் என நம்புகின்றேன். இவற்றின் ஊடாகத்தான் வருக்காலப் பேச்சுக்களுக்கு உக[illegible] ஒரு சூழலை உருவாக்கலாம் [illegible] அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சர்வதேசம்...

விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்தமைபோல - ஐரோப்பிய ஒன்றியமும் தடை செய்யவேண்டுமென அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

கடந்த செப்ரெம்பர் முதல் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் ஐரோப்பிய ஒன்றியத்துக்குள் பயணிப்பதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

எனினும், பாதுகாப்புத் தரப்பினருக்கு எதிராக தாக்குதல்கள் நிறுத்தப்படாவிட்டால், விடுதலைப் புலிகள் அமைப்பை ஐரோப்பிய ஒன்றியம் முற்றாகத் தடைசெய்யுமென எதிர்பார்ப்பதாக அரசாங்க வட்டாரங்கள் கூறுகின்றன.

இந்த நிலையில் ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளை தடை செய்யவேண்டுமென இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் கோரிக்கை விடுத்து வருவதாகவும் -

இலங்கையின் இந்தக் கோரிக்கைக்கு இந்திய அரசாங்கம் ஆதரவளித்து வருவதாகவும் கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## மட்டுவிலில்...

கிளைமோர் தாக்குதலை அடுத்து படை யினர் மீது துப்பாக்கிப்பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டதாகத் தகவல்கள் தெரிவித்தன.

கிளைமோர் தாக்குதலில் படுகாயமடைந்த இரு இராணுவச் சிப்பாய்களும் உடனடியாக ஹெலி மூலம் பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். இவர்களில் ஒருவர் சிகிச்சை பலனளிக்காது உயிரிழந்தார். மற்றையவரின் நிலை ஆபத்தான கட்டத்தில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (29)

## மன்னாரில்...

போக்குவரத்தில் ஈடுபட்ட வாகனங்கள் கடுமையாகச் சோதனைக்குட்படுத்தப்பட்டன.

வீதிகளில் உரிமையாளர் இன்றி நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள்களை பொலிஸார் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றனர்.

அத்துடன் மன்னார்ப் பகுதியில் பெருமளவான பொலிஸாரும் படையினரும் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

## பேச்சு முயற்சி தோல்வி...

என்பது நிச்சயமற்றது என சில தரப்பினர் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

முதல் சுற்றுப் பேச்சுவார்த்தையின் முடிவில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் ஒப்புக் கொள்ளப்பட்டபடி - வடகிழக்கில் உள்ள ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களை அரசாங்கம் களையாததை காரணமாக சுட்டிக்காட்டி விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை மேசையில் இருந்து வெளியேறலாம் என்று கூறப்படுகிறது.

இரண்டாம் சுற்றுப் பேச்சுக்களின் போது ஆயுதக் களைவுக்காக விடுதலைப் புலிகளால் அரசாங்கத்துக்கு காலக்கெடு விதிக்கப்படக் கூடும்.

அத்தகைய ஒருகாலக்கெடுவை விதித்து, அந்த கெடுவுக்குள் வடக்கு - கிழக்கில் இருக்கும் ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களை களையுமாறும் - இல்லையேல் தமது இயக்கம் யுத்தத்துக்குத் திரும்பும் என்றும் விடுதலைப் புலிகள் அறிவிப்பாளர்கள்.

இத்தகைய சிக்கல் நிலையே அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் யுத்தத்துக்குத் தயாராக இருப்பதற்கான பின்னணியின் காரணம் என்று அந்தச் செய்தி மேலும் தெரிவித்துள்ளது.

## கொகன்ன-ஹென்றிக்சன்...

ஹென்றிக்சனுக்கும் தனக்குமிடையில் நேற்று இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்போது இந்த இணக்கங்கள் ஏற்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

சில விடயங்களில் இன்னமும் தடங்கல் நிலை காணப்படுவதாக தெரிவித்த அவர் - அதுவும் இன்று தீர்க்கப்பட்டுவிடும் என்று நம்பிக்கை வெளியிட்டார். இருப்பினும், ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள் - ஏற்றுக்கொள்ளப்படாத விடயங்கள் எவை என்பது தொடர்பாக அவர் தீர்க்கமான நேரடிப் பதில்களை வழங்கவில்லை.

ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்டபடி அரசாங்கம் தனியார் கடற்கலமொன்றை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஏற்பாடு செய்து கொடுத்திருந்ததாக அவர் குறிப்பிட்டார். கடற்படையினர் இந்தப் படகின் இரு புறத்திலும் பாதுகாப்பு வழங்கிச் செல்வர் என்பதற்கும் இணக்கம் ஏற்பட்டிருந்தது.

அத்துடன், 32 பேரைக் கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் பயணம் செய்வதற்கும் சீருடையின்றி அவர்கள் பயணம் செய்வதற்கும் இணக்கம் ஏற்பட்டிருந்தது.

அதேநேரம், குறித்த படகுடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதம் தரித்த போராளிகளின் படகுகள் செல்லக்கூடாதென்பதற்கும் எழுத்துருவில் இரு தரப்புக்குமிடையில் இணக்கம் காணப்பட்டது.

எனினும், அதற்கு மாறாக தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள் 32 பேருக்கும் அதிகமானோர் குறித்த கடற்கலத்தில் ஏறியதாகவும், காலை 7.30 மணியளவில் கடற்கலத்தில் ஏறிய விடுதலைப் புலிகள் - 9.30 மணியளவில் அதிலிருந்து வெளியேறிச் சென்றுவிட்டனர்.

விடுதலைப் புலிகள் சமாதானம் தொடர்பாக தமது உறுதிப்பாட்டை காட்டாவிடினும் - அரசாங்கம் ஜெனிவா பேச்சு, குறித்த திகதியில் நடைபெறும் என்று நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, நேற்று அரசாங்க சமாதானச் செயலக செயலாளருக்கும், போர்நிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவருக்குமிடையில் நடைபெற்ற சந்திப்பில் குறிப்பிடத்தக்க இணக்கங்கள் ஏற்படவில்லையென போர் நிறுத்த கண்காணிப்புக் குழு பேச்சாளர் ஹெலன் ஒலப்ஸ் டோட்ரயர் தெரிவித்தார்.

எனினும், இன்று மீண்டும் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவரும், அரச சமாதான செயலக பணிப்பாளரும் சந்திக்கவுள்ளமையை அவர் உறுதிப்படுத்தினார். (01)

## மட்டுவில்...

தனமாக படையினரால் கொல்லப்பட்டிருக்கிறோம். எனவேதான் படையினர் மீது மக்கள் படையாக நாம் தாக்குதல் நடத்தத் தொடங்கி விட்டோம்.

கடந்த வாரம் தென்மராட்சியிலும், யாழ்ப்பாணத்திலும் எமது உறவுகள் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இதற்குப் பதிலாகவே நேற்று தென்மராட்சி - மட்டுவிலில் தாக்குதல் நடத்தியுள்ளோம்.

குடாநாட்டில் ஒரு தமிழ் மகன் கொல்லப்பட்டால் பதிலுக்கு ஆக்கிரமிப்புப் படையினரின் தலைகள் உருளும். இனிவரும் காலங்களில் நாம் பல்வேறு வியூகங்களில் தாக்குதல்களை மேற்கொள்ளவுள்ளோம்.

எனவே, அன்பான எமது உறவுகளே இதற்கு பூரணமாக ஒத்துழையுங்கள். பாதுகாப்பான இடம்நோக்கி நகருங்கள். பெறுமதியான உங்கள் உயிர்கள் பாதுகாக்கப்படும் என அந்த அறிக்கையில் தெரிவிக்[illegible]ட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.287, ஆவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 17.04.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.